283

2 8 3

ஸுபாநு ஹூ
ஆனி - ஆடி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

...ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

July, 1943
Vol. 2, No. 7

3L
N43:27
210115

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து	250
2.	கலங்காக் கருணை	254
3.	குறம்	257
4.	ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்	258
5.	ஸத் ஸம்பரதாய தீபம்	263
6.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரர் துதி	270
7.	ஸ்ரீராம பட்டாபிஷேகம்	271
8.	செய்திகள்	274
9.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	278
10.	கடோபநிஷத்	89

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸுபாநு வரு ஆனி - ஆடி மீ	ஸஞ்சிகை 7

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

OFFICE OF THE REGISTRAR OF ... 13 AUG 1943 MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

20115

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் : பங்களூர்]

ஸ்ரீமதாதி வண் சடகோப ஸ்வாமி முதலாக ஸ்ரீ அழகிய சிங்கர்களாகிற ஆசார்யர்கள் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனைத் திருவாராதநம் செய்து கொண்டு ப்ரதி க்ராம நகரந்தோறும் ஸஞ்சரித்து, ஆங்காங்கே ஸம்ஸாரத்தில் அடிச்சூடு பிறந்து மோக்ஷத்துக்காக த்வரிக்கும் மக்களுக்கு உபாயாநுஷ்டாநங்களைப் பண்ணிவைத்துக்கொண்டு வரும் நாளில், ஸ்ரீமதஹோபில மஹாஸ்தாநம் 34-வது பட்டத்தை அலங்கரித்தருளிய ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன், தம் திவ்ய தேசாடந க்ரமத்தில் ஸ்ரீ மதுராந்தகத்துக் கெழுந்தருளி, அங்கு ப்ருந்தாவநத்தில் அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் தமது ஆசார்யனை ஸேவிக்க, அப்போது, "இந்த ஆசார்யனுடைய அநுக்ரஹ விசேஷத்தாலன்றோ நாமும் நம் அழகியசிங்கர் திருவடிகளில் பரத்தை ஸமர்ப்பித்து நிர்ப்பரராக இருப்பது! இவ்வாறே ஸர்வ லோகமும் இவ்வெம்பெருமான் திருவடிகளில் சரணாகதி செய்தால் எல்லோருக்கும் உய்யுமாறாமே" என்று ஓர் எண்ண முதிக்க, அப்போது ஏற்பட்ட சகுநங்களாலே எம்பெருமானுடையவும் ஆசார்யனுடையவும் திவ்ய நியமநத்தைப் பெற்று ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளில் சரணாகதியை ப்ரதிபாதிப்பதான இந்த ப்ரபந்தத்தைச் செய்தருளினர்.

இந்த ப்ரபந்தமும், ஸகல சாஸ்த்ரார்த்த கர்ப்பிதமாய், தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிப்பதாய், ஸேவிப்போருக்கு அதிகரிக்கவும் அர்த்த க்ரஹணம் செய்யவும் மிகவும் ஏற்றபடி லளிதமாய் அமைந்துள்ளது.

'ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாத்ரி' என்கிற க்ரமத்தில் நம்பி இராமாநுசன் மங்களாசாஸநம் செய்தருளிய திருப்பதிகளில், பெரிய பெருமாள் திருவடியில் சரணாகதியைப் ப்ரதிபாதிப்பதான ஒரு கத்யத்தை ஸ்ரீ பாஷ்யகாரரே அநுக்ரஹித்திருக்க, அத்திகிரி யருளாளர்க்கு ஓர் அடைக்கலப்பத்து ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருக்க, அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை யுறையு மார்வனைத் திருவேங்கடத் தெம்பெருமான் திருவடிகளில் ஆழ்வாரே "உலகமுண்ட பெருவாயா" என்கிற சரணாகதிப் பதிகத்தை விண்ணப்பித்திருக்க, தார்க்ஷ்யாத்ரியாகிற காருட சைலத் தெம்பெருமான் திருவடிகளில் ஒரு சரணாகதிப் பதிகம் இல்லாத குறையை நிவர்த்தித்தருளினர் ஆசார்யன் இந்த ப்ரபந்த நிர்மாண முகத்தாலே. இந்த ஆசார்யன் உபய வேதாந்த

வைஶத்யம் பெற்றிருக்கச் செய்தே, இந்த ப்ரபந்தத்தை ஸம்ஸ்க்ருத க்ரந்தமாக அருளிச்செய்யாது ஒரு பாஷா பேதமாக அருளிச்செய்ததற்கடி, இது சரணாகதியை ப்ரதிபாதிப்பதாலும், சரணாகதிக்கு அந்தணரந்திய ரெல்லேயில் நின்ற அனைத்துலகும் அதிகாரிகளா யிருப்பதாலும், ஸர்வருக்கும் அதிகரிக்கலாம் பாஷையில் அருளிச்செய்தபடி.

மதுரகவிகள், தாம் ஆழ்வாருடைய திருவடிகளில் சரணமடைய "இன்பத்தி லிறைஞ்சுதலில்" இத்யாதியாகப் பத்துக் காரணங்களை அருளிச் செய்த தொப்ப, இந்த அடைக்கலப்பத்துப் பத்து பாசுரங்களிலும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளில் சரண மடைவதற்குப் பத்துக் காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முதற் பாசுரத்தில்: சரணாகதியை ப்ரதிபாதிக்கும் மந்த்ரங்களை ப்ரவர்த்தநம் செய்தருளிய ஆதி ஆசார்ய னென்றும், இரண்டாவது பாசுரத்தில்: ப்ரதிபந்தகங்கள் எவ்வளவுதான் பலமாக இருந்தாலும் அத்தனையையும் போக்கிச் சரணாகதர்களை ரக்ஷிக்கவல்ல ஸர்வ சக்த னென்றும், மூன்றாவது பாசுரத்தில்: 'யதீஶாநாத் ப்ரஜாஸ்ஸ்ருஷ்டா:' என்ற கணக்கில் பெரிய லோகபாலர்களெல்லாம் வந்து சரணாகதி பண்ணும்படியான ஸர்வ சரண்யனானதால் நமக்கும் அவனே சரண்ய னென்றும், நான்காவது பாசுரத்தில்: சரணாகதர்களை ரக்ஷிப்பதில் மிகுந்த உத்ஸாஹமுள்ளவ னென்றும், ஐந்தாவது பாசுரத்தில்: "ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" இத்யாதிகளின்படி ஸர்வாத்மாக்களும் ஸர்வ வ்யாபியுமானதால் சரணாகதி பண்ணத் தகுந்தவனென்றும், ஆறாவது பாசுரத்தில்: பக்தன் குறிப்பிட்ட தூணி லவதரித்தமையால் பக்த பராதீநன் என்றும், ஏழாவது பாசுரத்தில்: 'என் திருவடிகளில் பக்தியைப் பண்ணுங்கள்' என்பதால் பக்திநிஷ்டனுக்கும் கைமுதிக ந்யாயத்தால் ப்ரபந்நனுக்கும் க்ஷிப்ரமாக ஃபல ஸித்தியை யுண்டாக்குவா னென்றும், எட்டாவது பாசுரத்தில்: நித்யஸூரி பரிசர்யமாணனா யிருப்பதால் அவர்களோ டொக்கத் தானும் கைங்கர்யம் செய்வதே புருஷார்த்த மென்றும், ஒன்பதாவது பாசுரத்தில்: அவனே முமுக்ஷுக்களுக்கு உபாயமாகவும் புருஷார்த்தமாகவு மிருக்கிறா னென்றும், பத்தாவது பாசுரத்தில்: ஆசார்யனை உபமாநமாக வைத்துக்கொண்டு அவரைப் போல் எம்பெருமான் திருவடிகளில் சரணாகதி பண்ணினால் மோக்ஷ மடைவதில் ஸந்தேஹமில்லை என்றும், இப்படி பத்துப் பாசுரங்களிலும் பத்துக் காரணங்களை அருளிச்செய்து நிகமநத்தில் ப்ரபந்தத்தின் பலனை ஸங்க்ரஹிக்கிறார்.

அன்றிக்கே: எம்பெருமானுடைய ப்ரபாவங்களும் இவற்றில் பரக்க நிரூபிக்கப்படுகின்றன. இப்பாசுரங்களிலே, ஆதியிலே வேதத்தை வழங்கினதடியாக ஆதி ஆசார்யனானமையும், பிராட்டியாரோடுங் கூடியிருந்து துஷ்க்ருத விநாச புரஸ்ஸரமாக சிஷ்டபரிபாலநம் செய்யுமிட

மும், ஆஸ்ரித விரோதிகளை அழிப்பதில் அவருக்குள்ள த்வரையும், இவரே பரதேவதை என்று காட்டிக் கொடுக்கும் அவருடைய ஸர்வ வ்யாபித்வமும், ஆஸ்ரித ரக்ஷணத்துக்கேற்ற காலமே அவதாரங்களுக் கேற்ற கால மென்பதும், பகவத் பக்தியோடு கூடிய த்யாநமே ஸ்ரேயஸ் ஸுக்கு ஸாதநமா மென்பதும், இவ்வெம்பெருமான் ஒழிவில் கால மெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யும் நித்யஸூரிகளால் பரிசர்யமாணனா யிருக்கு மிருப்பும், இவனே உபாயோபேயங்களா யிருக் கிறா னென்பதே ஸர்வ வேதாந்த ஸம்ப்ரதிபந்நமான விஷய மென்பதும், இவ்வெம்பெருமான் திருவடிகளில் ஆசார்ய புருஷகாரத்தோடு சரணா கதி பண்ணுவதுதான் ஹிதம் என்பதும், பாசுரங்களின் ஃபல ஸ்ருதி களும் பரக்க நிரூபிக்கப்படுவதைக் காணலாம்.

அன்றிக்கே: எம்பெருமான் நிர்குண னல்லன். பரத் வத்துக்கு ஸூசகமான ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஷட்குணங்களும், கருணை ஆர்ஜவம் முதலிய குணங்க ளும் உள்ளவன் என்றும் சொல்லப்படுகின்றது.

அன்றிக்கே: பகவானுடைய சாந்தோதிதாவஸ்தை, நித்யோதிதா வஸ்தை யென்னும் அவஸ்தாத்வயமும், அவற்றில் நித்யோதிதத்தில் பர வ்யூஹ விபவ ஹார்த்த அர்ச்சையென்னும் பஞ்சப்ரகாரமாக இருக்கும் இருப்பும் சொல்லப்படுவதை ஆங்காங்கே காணலாம்.

இந்தப் பாசுரங்களை ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்களோடு ஒப்பு நோக்கியும் ரஸிக்கலாம்.

முதல் பாசுரத்தில் "மாமலராள் மன்னியுறை மடியுடையான்" என்பதோடு "நம்முடை நம்பெருமான் அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளன்" என்பதும், இரண்டாவது பாசுரத்தில் "பேர்வலிசேர் பொன் பெயரோன் பேருடலைப் பிளந்தமை"யோடு "அவுணன் வாய்ந்த வாகம் வள்ளுகிரால் வகிர்ந்த வம்மான்" என்பதும், மூன்றாவது பாசுரத் தில் "மறையோனும் மாமதிசேர் மறுசடைய னிந்திரனும் மறை முனிவ ருடன் வந்து மலரதனை யிறைஞ்சி நிற்க" என்பதோடு "நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையாலேத்த" வென்பதும், நான்காவது பாசுரத்தில், "அவுணன் குடலலறப் பாய்ந்தமை"யோடு "ஆகம் வள்ளு கிரால் வகிர்ந்த வம்மா" னென்பதும், இவ்வாறு அர்த்தங்களில் ஸாத்ருஸ் யங்கள் பல பல தோன்றுகின்றன.

இந்த க்ரந்தகர்த்தாவான ஸ்ரீ அத்திப்பட்டு மஹாதேசிகனுக்குப் பரிசர்யை பண்ணி, அவருடைய அந்தரங்கம் தெரிந்தவர்கள் பின்வரு மாறு கூறக் கேட்டிருக்கிறோம்.

"சரணாகதி பண்ணுகிறவர்கள் இந்த ஆசார்யனை வந்து அடைந்து, அடியேனுக்கு ஶரணாகதி பண்ணிவைக்கவேண்டு மென்று கேட்ட மாத்ரத்திலேயே சரணாகதி பண்ணிவைப்பது கிடையாது.

ஏனெனில் : ஸம்ஸாரத்தில் அடிச்சூடு பிறந்ததோ இல்லையோ வென்றும், சரணாகதியில் த்ருடமான நம்பிக்கை இருக்கிறதா வென்றும், எம்பெருமானிடம் மஹா விஸ்வாஸம் பிறந்ததா வென்றும் நன்றாகப் பரீக்ஷை பண்ணி, தம்முடைய திருவுள்ளத்துக் கேற்க இந்தச் சேதநன் சரணாகதிக்கு யோக்யன்தான் என்று திருவுள்ளம்பற்றின பிறகு தான் அவனுக்குப் பரஸமர்ப்பணம் செய்துவைக்கும்படி யிருக்கும். இப்படிப்பட்ட ஒரு ஆசார்யன் சரணாகதியை ப்ரதிபாதிக்கும்* ஒரு ப்ரபந்தத்தை அநுக்ரஹித்தருளினால், அதை ஆசார்ய முகமாக அதிகரித்து அநுஸந்திப்பார்க்குக் கடுக ஃபலஸித்தி யுண்டாவதில் ஸந்தேஹமென்ன?

இந்த ப்ரபந்தத்தின் ஸர்வ விதமான வைலக்ஷண்யங்களையுங் கண்டே ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் திருமாளிகைகளிலும் ஸ்ரீ ஸந்நிதியிலும் இதைத் நித்யமும் அநுஸந்தித்து வருகிறார்கள்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநுஹு ஆடிமீ

1உ சனிக்கிழமை	—	பௌர்ணமி : சூந்ய திதி.
2உ ஞாயிற்றுக்கிழமை	—	ப்ரதமை : சூந்ய திதி.
3உ திங்கட்கிழமை	—	கடக க்ருஷ்ண த்விதியை - த்ருதீயை : திதித்வயம்.
11உ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
15உ சனிக்கிழமை	—	அமாவாஸ்யை.
19உ புதன்கிழமை	—	திருவாடிப்பூரம்.
25உ செவ்வாய்க்கிழமை	—	சுக்ல நவமி - தசமி : திதித்வயம்.
27உ வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
30உ ஞாயிற்றுக்கிழமை	—	* சந்த்ர க்ரஹணம் : ரிக் - யஜுர் உபாகர்மம், கடக சுக்ல பூர்ணிமா திதி.
31உ திங்கட்கிழமை	—	காயத்ரீ ஜபம், ப்ரதமை திதி.

---

* ஸுபாநுஹு ஆடிமீ 30உ (15—8—43) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணிமை 19—24; திருவோணம் 26—27 க்கு மேல் அவிட்டத்தில் பார்ஶ்வ ($\frac{7}{8}$) சந்த்ர க்ரஹணம். பர்வ ஶ்ராத்தம் மறுநாளும், பகல் 3—15 மணிக்குள் போஜநமும் செய்யவேண்டும்.

		மணி நிமி.
ஸ்பர்ஶ காலம்	ராத்ரீ	12—29
மத்ய காலம்	,,	1—59
மோக்ஷ காலம்	,,	3—29
ஆத்யந்த காலம்		3—0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1943
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கலங்காக் கருணை

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், வித்வான் M.A.,L.T.]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 6, பக்கம் 243-ன் தொடர்ச்சி)

கூரத்தடிகள் திருமுகத்தில் கருணை பொழிந்து தாண்டவமாடியது; புன்னகை பூத்தது. "மன்னா! உன்னுடைய செல்வத்தைக் கண்டவுடன், 'ஐயோ! இது தீங்கின்றி நிலைக்கவேண்டுமாயின் பெரியோர் உள்ளங் கொதிக்காமலிருக்கவேண்டுமே' என எண்ணியதுண்டு. 'யஶ்ரியஶோ ந்ருபஸ்ய வாநு ஸ்ப்ருஹயம்............' என்றெல்லாம் மனத்தில் ஓடியது. என் மனதில் உன் ஹிதமன்றி வேறில்லை. '**श्रूयतां चापि वचनं मम पथ्यमिदम्**' என்றபடி என் ஹித வார்த்தையைக் கேள். **धर्मार्थोपहितं वाक्यं इह चामुत्र च क्षमम्**'. உலகில் ஸ்ரீ புருஷோத்தமனன்றிப் பரனில்லை. நமக்கு ஊனாய், ஊனில் உயிராய், உயிரில் ஒளியாய், ஒளியின் பயனாய், தானே தத்வ ஹித புருஷார்த்தமாய்த் தனித்து நின்றவன் தாமரையாள் கேள்வனே...." என, ஓர் பண்டிதன் குறுக்கிட்டு "அடே பண்டிதாபசத! சிவாதீதமான தத்வம் சொல்வதும் விருத்தமாயிற்றே" என, கூரத்தடிகள் சலியாது, "சிவத்திற்கு (அளக்கும் கருவி - ஒரு மரக்கால்) மேல் த்ரோணம் (பதக்கு - அதாவது: 2 மரக்கால்) உலக வழக்கில் தினந்தோறும் பார்க்கிறோமே" என்று சொல்லிச் சிரித்தார். அவர் முகம் முழுவதும் ஓர் கலங்காத நம்பிக்கை ப்ரகாசித்தது. அரசன் கோபித்தான். நாலூரான் முகத்தைப் பார்த்தான். பாத பீடத்தைக் காலால் ஓங்கி அறைந்தான். "கையெழுத்திட்டு மர்யாதையாய்ப் போகிறீரா ....?" என நாலூரான் ஆரம்பித்தான். ஶாந்த ஸ்வரூபியான பெரிய நம்பிகளது அதரம் துடித்தது. "ராஜன்! தாத்காலிகமான சில வைபவங்களால் நித்யதத்வத்தை இல்லைசெய்ய முடியுமா? தங்களுடைய கோரிக்கையே தவறு என்று ஸ்வாமி காட்டியருளினார். அதில் எவ்வாறு கையெழுத்திட முடியும்? ஸ்ரீ காந்தன் ஒருவனே சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் உறைந்து விளங்குபவன். அவனே ஸர்வ நியந்தா. ஸர்வ ரக்ஷகன். மற்றெத்தேவரும் அவனுக்கு ஆட்செய்யும் சேதநர்கள். ராஜன்! வீணில் ஸ்ரீ ராமாநுசனிடம் அபசாரப்படவேண்டாம். இம்மாபெரும் பாதகத்தில் உலகமே நடுங்கும். உயிர்கள் அழியும். எங்களையும் உங்களையும் யாவரையும் படைத்துகந்த தயாநிதியை மறப்பது தாயை மறந்த தகவின்மை யல்லவா? பூபால! கேள். ஸ்ரீ ரங்கராஜனின் தொண்டரை வெகுளாதே. நித்யமாய் நிர்விமோசநமான நரகத்தைத் தேடாதே" என்றார். கருணை ததும்பும் இவர் சொற்களைக் கேட்டுச் சிலர் வியந்தனர். சிலர் துதித்தனர். சிலர் தலை யசைத்தனர். 'என்ன தைர்யம்! என்ன உறுதி!' என்று வாய்விட்டுச் சொல்லினர் வேறு சிலர். இடி இடித்ததுபோன்ற குரலில் அரசன், 'மந்த்ரீ! வேண்டிய காரியம்

தொடக்கலாம்' என்றெழுந்து சென்ருன். திரும்பினுன். முகம் கறுத்தது. த்வஜி படபடத்தது. "வழி வந்தால் உடனே என்னிடம் தெரிவிக்கவும்" என்று போனுன்.

ராஜபடர்கள் கூரத்தாழ்வானையும் பெரிய நம்பிகளையும் பிடித்துக் கொண்டனர். சடையும் சடைப் பொதியில் சிவலிங்கமும் கொண்ட ஓர் காபாலிகன், "ஏ மித்யாசாரா! நீ துறவியோ?" என்று த்ரிதண்டத்தைப் பிடிங்கி வீசி யெறிந்தான். 'ஸ்ரீமந்நாராயண ஸ்ரீமந்நாராயண' என்ற குரல் இனிது எழுந்தது. காபாலிகனது கட்டளையின்பேரில் ஊமத்தங் காய்களும் முட்களும் செறிந்து கட்டப்பெற்ற ஓர் தண்டம் அவர் கையில் செருகப்பெற்றது. 'நம: பரமகுரவே நம: பரமகுரவே' என்று காபாலிகனும் அடியாரும் பரிஹாஸமாகக் கைகுவித்துச் சிரித்தனர். 'தண்டத்தை அழுத்திப் பிடியடா!' என்று ஒருவன் செந்தாமரை போன்ற கூரத்தடிகளின் திருக்கைகளை அமுக்கிப் பிடித்துவிட்டான். முட்களும் காய்களுங் குத்தவே இரத்தம் பீரிட்டடித்து ஒழுகியது. 'ஸ்ரீமந்நாராயண ஸ்ரீமந்நாராயண' என்ருர் அடிகள். ராஜபடர்கள் பேரில் மூர்ச்சையானுர் பெரிய நம்பிகள்.

இருவரும் தண்டநசாலைக்குத் தெருவழியே அழைத்துச் செல் லப்பட்டனர். தெருவிலும் மாடங்களிலும் மக்கள் பல்லாயிரக் கணக் காய்க் கூடியிருந்தனர். சிலர் அழுதனர். சிலர் தேம்பித்தேம்பி நின்ற னர். 'என்ன முகம்! என்ன பொலிவு!' என்று சிலர் புலம்பினர். 'இந்த மஹான் சொல்வதே தத்வம்போலிருக்கிறது' என்ருன் ஒருவன். 'சீசீ ராஜபுருஷர் கேட்டால் உன்னை லகுவில் விடார்' என்ருன் மற் ரொருவன். இவ்விரண்டு அடியவரைச் சுற்றிக் கூட்டம் திரண்டது. பங்குனி மாத வெயில். ஆகாசம் மாசு மறுவற்று நிர்மலமாய் அக்நியைக் கக்குவதுபோல் விளங்கியது. தெருக் கோடியில் தண்டநாகாரத்திற்குக் காலை தீய்க்கும் வெயிலில் கடத்திச் செல்லப்பட்டனர். 'மஹாகுருவே' என்று ஒருவன் பணிந்தான். 'சிரகாலம் நல்ல புத்தியுடன் வாழ்வா யாக' என்ருர் அடிகள். ஓங்கி முகத்தில் அறைந்தான் போலிச் சிஷ்யன். 'கடவுளே உரைத்த ஆகமத்தை இகழ்ந்து, பிறந்து பிறந்து இறந்த ஓர் பேதையைப் பரதத்வ மென்ருய், அறிவிலி!' என்ருன். ராஜபடர்களின் கையில் பெரியநம்பிகள் துடிதுடித்தார். கை கட்டப்பெற்றது காரண மாகக் கூண்டில் அடைபட்ட சிங்கம்போல் சீறினுர். 'ஸ்வாமிந்! இது என்ன சோதனை!' என்று உரக்கப் புலம்பினர். கூரத்தடிகள் புன்முறு வல் பூத்து, "ஸ்வாமிந்! நாம் செய்யும் செயல் ஏதேனும் உண்டா? தர்மத்திற்குப் பராஜயமு முண்டோ? ராமாநுசன் வாழ்க! ராமாநுசன் வாழ்க!" என்று ம்ருதுவாகச் சொல்லித் தேற்றினர். பர்வதம்போல் வளர்ந்து உடலெல்லாம் பஸ்மதாரியாய்ப் பீதகப் பட்டாடையும் ஸௌவர்ண குண்டலங்களும் ஜடாமுடியும் தரித்த ஒருவன் தன்பின் இரு வர் பிடித்துவந்த குடைநிழலில் நின்று, 'அடே மதாந்தா! த்ரிபுரத்தை

எரித்தது நீங்களா? ஆலாகலம் விழுங்கி அம்ருத மதநத்தை ஸாதித்தது நீங்களா?' என்று ஆரம்பிக்கக் கூரத்தடிகள், 'பரம யோகியாய் பக்தாக்ரேஸனாய் விளங்கிய சங்கரனது வைஷ்ணவ நிலையை அவனது தோற்றமே உணர்த்தும்! தெளிந்திலையாகில் உனக்கு அந்த மஹாஞானியே நற்புத்தி கொடுக்கவேண்டும்' என்றார். ஹாஹா என்ற ஆரவாரம் கடல்போல் எழுந்தது. 'தூ' என்று அக்காபாலிகன் காறி உமிழ்ந்த எச்சில் அடிகள்மீது படாமல் யத்ருச்சையாய்த் தாவிப்பாய்ந்த ஓர் ராஜபுருஷன் ஆடையில் விழுந்தது. 'வாயை மூடு' என்று கூரத்தடிகள் வாயில் அறைந்தான் ராஜபுருஷன். வேதனையால் ஸ்ரீ கூரத்தாழ்வான் திருக்கண்கள் மூடின. வாய் ஓரத்தில் சிறு ரக்தத் துளிகள் சோர்ந்தன. 'ஐயோ ஐயோ' என்று சிலர் ஆர்த்தனர். ஓர் மாதரசி உடலிலும் முகத்திலும் நீறு பூசிய ஓர் சிறு பிள்ளையை ஆழ்வான் காலில் கிடத்தி "என் அப்பனே! பல வருஷம் வைஷ்ணவராய் ராமானுச னடியராய்த் திரிந்து, சின்னாள் முன்பு வயிற்றுக் கொடுமையால் இந்தக் கோலம்பற்றி அந்யாயமாய் நரகிற்காளானேம். பொறுத்தருள் புண்ணியனே. இனி எக்கதி வரினும் வந்தெய்துக. இந்தக் குழந்தையும் என்னையும் அங்கீகரித்தருள்க" என்று தேம்பித்தேம்பி அழ, ராஜபுருஷர்கள் அவளை அடித்து உதைத்து அப்பால் இழுத்துச் சென்றனர். பெரிய நம்பிகள் உஷ்ணமான கண்ணீர் வெள்ளம் பெருக, "ஸ்ரீ ரங்கராஜனே! உன் அடியார்க்கு இவ்வுலகில் மதிப்பு இத்துணையோ!" என்று சொல்லி மறுகினார்.

* * * * *

பரிதாபமான இப்பழைய வ்ருத்தாந்தத்தைப் பன்னி யுரைக்கில் ஓர் பாரதமாகும். வழிநடையில் வயற்புறத்தே குறுகிய பாதையில் ரண ஜன்னி வேதனையால் ஸ்ரீ கூரத்தாழ்வான் மடியில் பெரிய நம்பிகள் கிடந்தார். இரண்டு கண்களும் இருவருக்கும் பிடுங்கப்பட்டுச் சொல்லொணாப் புண்கொண்டு நின்றன. என்ன கண்கள்! வந்தவரது துன்பத்திற்கு அருமருந்தாங் கண்கள்! அரங்கனிடம் அன்புக்கடல் கொந்தளிக்கும் கண்கள்! அடியவர்பால் அருள்வெள்ளம் பொழியுங் கண்கள்! பெரிய நம்பிகள் அந்திமாவஸ்தையி லிருந்தார். கூரத்தடிகள், திருமந்த்ரம் த்வயம் சரம ஶ்லோகங்களை மாறிமாறித் தழுதழுத்த குரலில் உச்சரிக்கிறார். இடையிடையே ஆற்றாமல், "என் அன்பே! என் கற்பகமே! ஸ்ரீ வைஷ்ணவக் கனியே! நீ நம் இராமானுசனைக் காணாது போதியோ! என் பொன்னே! பொறையே! புகலே! புண்ணியமே! பொற்கலமே!" என்று கதறினார். பெரிய நம்பிகள் கைகுவித்து, "நக்ஷத்ர மண்டலம் சந்த்ரன் ஸூர்யன் ஆகாசம் மலை கடல் இவைகள் உள்ளமட்டும் ஶ்ரிய: பதி க்ருபை அழியாது. நம் தர்சநமும் அழியாது, அழியாது, அழியாது. அவர் குரல் ஒங்கியது. என் ராமானுசமே! மண்ணுளார் புகலே! மறைமொழி புயலே! எங்களுக்கு என்ன பேறு தந்தனை! எங்கள் கண்ணிலிருந்து உதிர்ந்த ரக்தமே பாய்நீராக, எங்கள் அன்பே எருவாக, இம்

மாபெரும் வ்ருக்ஷம் வைஷ்ணவ் கல்பதரு தழைக்கட்டும். கூரத்தடிகளே! என் கொண்டலே! அதோ எம் இராமானுச னடியார் செல்லும் நிகரில்லாத பரமபத மார்க்கம் போகின்றேன்.'' அவர் உதடு துடித்தது. வாயில் ஓர் இன்ப காநம் எழுந்தது. சூழ்விசும் பணிமுகில் தூரிய முழங்கின. மதிமுக மடந்தையர் மணிவிளக்கேற்றினர்......"கூரத்தின் கொற்றவனே! ஒன்று நீ பணியாய். இம்மன்னவன்பால் அடியேனது துயர் காரணமாகச் சிறிதும் சீற்றம் வேண்டா. கோயில் எழுந்தருளினல் ஸ்ரீ ரங்கராஜன் முன்பு என்ன விண்ணப்பிப்பீர்?'' எனக் கூரத்தடிகள் யோசியாது "நான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேண்டும் என்பேன்'' என்றார். பெரிய நம்பிகள் கண்மூடினர். அவர் முகத்தில் சாந்தியும் ஆநந்தமும் பொங்கின. ஆகாயத்தில் நக்ஷத்ரங்கள் ஜ்வலித்தன. தன்னந்தனியே கூரத்தடிகள் தன் மடியில் அந்த விலையற்ற வஸ்து உயிரற்றுக் கிடக்கத் தடவித் தடவி உட்கார்ந்திருந்தார். விக்கிவிக்கி அவர் உடல் குலுங்கியது. ரக்தக் கறை யேறிய தன் வஸ்த்ரத்தால் முகத்தைத் துடைத்துக்கொண்டார். அமைதியான இரவில் ஆகாயத்தில் நக்ஷத்ரங்களும், மடியில் ஸ்ரீ பெரிய நம்பிகளின் திவ்ய திருமேனியுமே துணையாக, மனம் புழுங்கி நின்ற இக் கூரத்தடிகளின் - கருணாநிதியின் - ஸமய ஸஞ்ஜீவியின் - ஜகதேகபந்துவின்-ஓர் எழுதற்கரிய-சொல்லற்கரிய-பாவநமான துயர்க்கடலை யாரே வர்ணிப்பர்! இத்துயரைக்கேட்டு மனம்படைத்துப் புழுங்கி வயிறு பிடிக்காத வாசகர் உண்டா? ஆருயிர் பட்டது! என்னுயிர்பட்டது!!

குறம்

[சிங்கமலையில் வாழும் குறத்தி அம்மலையின் பெருமைகளைப்பற்றிப் பாடுவது]

சிங்கமலை துங்கமலை எங்களது நாடு—அது—எங்களது நாடு
தெய்வங்கள் போற்றும் மலை—எங்களது நாடு.

1. விண்ணையி டிக்கும்மலை வேதங்கள் போற்றும்மலை
கண்ணைக்க வரும்மலை கரியினங்கள் வாழும்மலை
மண்ணைத்து லக்கும்மலை மாதவனர் தங்கும்மலை
தெண்ணீர்ந தியலைக்கும் சிங்கமலை யென்மலையே.

2. வாளெயிற்றேர் கோளரியாய் வானவர்கோன் வந்தமலை
ஆளிகள் தொழுதிறைவன் அடியிணையில் வாழும்மலை
வாளிகள் சிந்தும்விற்கை மலைக்குறவர் மாதவன்றன்
தாளிணையைச் சாரும்மலை சிங்கமலை யென்மலையே.

3. முந்தமரர் கோன்விழைந்து முரணழிப்பான் வந்தமலை
புந்தியிலே யோகிவரர் வைத்துநிதம் போற்றும்மலை
அந்தரத்து வானவர்கள் அணியணியாய் வந்துதொழும்
செந்திருவாள் நாதன்மலை சிங்கமலை யென்மலையே.

—திருப்பூந்துருத்தி ஸ்ரீ, உப. V, S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.

2

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 6, பக்கம் 22-ன் தொடர்ச்சி]

இந்த ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை இந்த ஸ்வாமி தம்முடைய பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தில் *16, 17-வது ஸ்லோகங்களில் தாமே ஸாதித்திருக்கிறார்.

ஸ்தேம தர்ப்பணம் முதலிய க்ரந்தங்கள் அருளிச்செய்தது

அநந்தரம் பார்த்திவ வருஷம் கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ. உப. குடைவாசல் ராமபத்ராசார்யர் மூலமாக மன்னார்குடி ப்ரஹ்மஸ்ரீ ராஜு சாஸ்த்ரி அவர்களுக்கு ஓர் பத்ரிகை அனுப்பி, அதில் ஸ்ரீ பாஷ்யத்தில் முதல் ஸ்லோகத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரால் ப்ரயோகிக்கப்பட்டதாயும், ஸ்திர ஜங்கமாதிகளில் ப்ரக்ருத்யத்திற்கு ப்ராப்தியே இல்லாததுமான 'ஸ்தேம' சப்தத்திற்கு ஸாதுத்வ ஸம்பாதநத்திற்கு வழி என்னவென்றும், அப்படியே ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ருஹீதங்களான ஸ்ரீஸ்துதியிலும் தயாசதகத்திலும் "ஸ்தவீயாந் ஜாக்ஷாரஸம்" என்றும், "ஸ்தவீயோதிர்யதே ஸ்தவதவ்யீயைந:" என்றும், பும்வத்பாவ ரஹிதங்களான ப்ரயோகங்களுக்கு உபபத்தி என்னவென்றும் கேட்டு, அவைகளுக்கு அந்த சாஸ்த்ரிகளால் எழுதியனுப்பப்பட்ட ப்ரதி பத்ரிகையின் பேரில் "ஸ்தேமதர்ப்பணம்" என்கிற க்ரந்தத்தையும் "வாததரங்கிணீ" என்கிற க்ரந்தத்தையும் செய்தனுப்ப நேர்ந்தது. இந்த க்ரந்தங்கள் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதி வாஸம்

பிறகு அந்த ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கரும் கொஞ்சநாள் கழித்துத் திருநாட்டை யலங்கரிக்கவே, அப்போது ஆஸ்தாந நிர்வாஹத்திற்கு வெகு பேர்கள் நம் ஸ்ரீ ஸ்வாமியை ப்ரார்த்திக்கும்போது, ஸ்வாமியும் தம்முடைய திருத்தாயார் சரம கைங்கர்யத்தையே ப்ரதாநமெனத் திருவுள்ளம்பற்றி இவ்வாஸ்தாந நிர்வாஹத்தை நிராகரித்துவிடவே,

*37-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீமுகம்.

16. ஸாத்வீஸ்வப்நே கதாசித் த்விதிதவஸதம் தாஸமீக்ஷ்யஹஸ்தா
வாத்யேத்யாஸ்தாய காமேஸ்வதபக ஸமபதாத்யஸந்தேஸ்வரோந்ரோ |
க்ஷீயேதம் ஸாம்யௌ நிஸர்ஷிஹ கரள காஸ்யேதேதி ஹ்ருத்யாது
க்ஷஹம் யோத்தோஷயந்த ஸ்வம் ஸவதி ஜநநீம் தோஷயாமாஸிஹோ ||
17. மோகாதே தாஸவயே க்வசி ஸதவஸி ஹரிஹர்ஷரோமாதீவ
த்ஸ்மஹாத்தோஷதீதி தூதிஹ கவி ஸ்ரேஷ்யேதேதி தோஷ: |
காவ்யத்யாஸா நவாதீ ஸ்வதிவர்வாணீய ஸம்வஸ்ரரீதாக்ஷி
ஸாக்ஷீக்ருத்யேவ தாஸம் ஸ்ரதி வமு ஹவாது ஸவதேதந்யாஸோ ||

வேறு ஸ்வாமிகள் ஆஸ்தாந நிர்வாஹம் செய்துவந்தார்கள். அப்போது ஸமயப்ரதீக்ஷராய் ஸ்ரீபெரும்பூதூரில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பாஷ்யகாரரும் இதுவே ஸமயமென்று பார்த்தருளி, தம்முடைய கோயிலுக்கு வந்துசேரும்படி நியமிக்கவே, ஸ்வாமியும் உடனே புறப்பட்டுப் பிள்ளைபாக்கம் எழுந்தருளி, அங்கு வஸித்துக்கொண்டே ப்ரதிதிநமும் ஸ்வாமி ஸேவார்த்தமாக ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில், ஸ்ரீ பாஷ்யகாரர் தம் ஸேவார்த்தமாகத் தம்முடைய பக்தன் படும் ஶ்ரமத்தை ஸஹியாதவராய்த் தம் திருவடிவாரத்திலேயே தம்முடைய விமாநஸேவை எப்பொழுதும் கிடைக்கக்கூடியபடி புஷ்கரிணி தென் சரகில் ஓர் க்ருஹத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளும்படி ஸங்கல்பிக்கையில், நம் ஸ்வாமியும் மஹாநந்த பரிதராய்த் தமக்கு 'சென்றால் குடையாம்' என்கிற ரீதியில் ஸகல வித கைங்கர்யங்களையும் செய்யும் தம் திருத்தம்பியிடம் குடும்ப பாரத்தைச் சுமத்திவிட்டு ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருமேனி ஸேவையில் ஈடுபட்டு "யதிராஜபோகம்" என்கிற ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து, அதை எப்பொழுதும் மனத்தில் அநுஸந்தித்துக்கொண்டு சிலகாலம் எழுந்தருளி யிருந்தார். அந்த ஸமயத்தில் அவ்வூரிலிருந்த சில தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஸ்வாமியிடத்தில் குணங்களால் தாஸ்யத்தை வஹித்து, 'சப்தேந்து சேகரம்' 'மஹாபாஷ்யம்' முதலிய க்ரந்தங்களை வாசித்தார்கள். அப்பொழுதுதான் ஸ்ரீமான் திருமங்கலம் நரஸிம்ஹாசார்யர் என்ற ஸ்வாமியும் ஸ்ரீபெரும்பூதூருக்கு வந்து ஸ்வாமியிடம் வ்யாகரண சாஸ்த்ரத்தை மஹாபாஷ்யாந்தமாக வாசித்தார்.

திவ்யப்ரபந்தாத்யயநமும் திவ்யதேச யாத்ரையும்

இப்படி ஸாமாந்ய சாஸ்த்ர ப்ரவசநம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் தமக்குத் திருவாய்மொழி முதலான ஆழ்வார்களின் ப்ரபந்தங்கள் ஸதாசார்யமுகமாகக் கிடைக்காததால் அதற்காகக் காயார் என்கிற அக்ரஹாரத்தில் உஞ்சவ்ருத்தி பண்ணிக்கொண்டு, எழுந்தருளியிருந்த ஸ்ரீ சடகோபாசார்யர் என்கிற ஒரு பரமைகாந்தி ஸ்வாமியிடத்தில், ஸர்வதாரி௵ புரட்டாசி௴ ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்தில் ஆரம்பித்து, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' 'திருவாய்மொழி' 'இராமானுச நூற்றந்தாதி' முதலான சில ப்ரபந்தங்களை அத்யயநம் செய்தருளினர்.

இந்த ப்ரபந்தங்களை ஸாதரம் ப்ரதிதிநம் அநுஸந்தாநம் செய்கையில் இந்த ப்ரபந்தத்ரஷ்டாவான ஸ்ரீ ஆழ்வாரை ஸேவிக்கவேண்டுமென்கிற அபிநிவேசம் பெற்றவராய் ஸ்ரீ ஸ்வாமி விக்ருதி௵ புரட்டாசி மாதம் யாத்ரை ஸங்கல்பித்துக்கொண்டு திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்தை மங்களாசாஸநம் செய்தருளி, க்ரமேண திவ்ய தேசம்தோறும் மூன்று நாட்களுக்குக் குறையாமல் தங்கியிருந்து எம்பெருமான்களை ஸேவித்துக்கொண்டு, அவ்வருஷம் பகல் பத்து உத்ஸவம் ஸேவிப்பதற்காக ஸ்ரீரங்கம் எழுந்தருளி, அங்கு இரண்டு மாஸ காலம்

ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸநம் செய்துகொண்டு தை உத்ஸவத்தையும் அவப்ருதாந்தமாக ஸேவித்துவிட்டு, திருமெய்யம் திருக்கோட்டியூர் திருப்புல்லாணி எம்பெருமான்களையும் ஸேவித்துக்கொண்டு, ஸேது தர்சநமும் முடிந்தவாறே திருநகரிக் கெழுந்தருளி ஸ்ரீ ஆழ்வாரையும் மாசி மாதத்தில் அவருடைய அர்ச்சாவதார ப்ரஹ்மோத்ஸவத்தில் அவருடைய ப்ரபந்தாநுஸந்தாநத்தால் மங்களாசாஸநம் செய்துகொண்டு, அவ்விடத்திலுள்ள நவ திருப்பதிகளையும் மங்களாசாஸநம் செய்துகொண்டு அத்திருநகரியிலேயே இருபதுநாள் இருந்து மதுர கவிக்ருதமான கண்ணிநுண் சிறுத்தாம்பை ஆயிரம் ஆவர்த்தி அநுஸந்தாநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். பின் வானமாமலை தோதாத்ரீசனை ஸேவித்துவிட்டு, திருக்குறுங்குடி என்னும் திவ்ய தேசத்திற்கு எழுந்தருளி நம்பியை மங்களாசாஸநம் செய்து, அவ்வூர் ஆற்றங்கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பாஷ்யகாரரையும் ஸேவித்துவிட்டு, அவ்வாற்றில் நீராடி மீந ஸங்க்ராந்தி ஶ்ராத்தத்தையும் செய்தருளி, அத்திவ்ய தேசத்தின் ஸ்தல ராமணீயகதையைப் பார்த்து அங்கேயே கொஞ்சகாலம் வஸிக்கத் திருவுள்ளம் பற்றியாயிற்று.

இந்த ஸமயத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரும் இந்த ஸ்வாமியை விட்டு அதிககாலம் பிரிந்திருக்கத் திருவுள்ளமில்லாமல் திருத்தாயாருக்கு திருமேனியில் ஸ்வல்ப அபாடவத்தை ஸங்கல்பித்துத் திருமேனி பாங்கில்லையென்று தந்தி மூலமாகத் தெரிவிக்கும்படி பந்துக்களை ப்ரேரிக்க, அவர்களும் அப்படியே செய்ய, ஸ்வாமியும் தந்தி கிடைத்ததும் ஸ்ரீ ந்ருஸிம்ஹாஸ்தாந நிர்வாஹத்தைவிட தாயாருடைய கைங்கர்யமே ப்ரதாநமென்று பூர்வமே திருவுள்ளம்பற்றியவராகையால் அந்தக் கைங்கர்யம் தமக்குக் கிடைக்கவேண்டுமென்கிற ப்ரார்த்தனையோடு திருக்குறுங்குடி நம்பி ஸந்நிதியில் ப்ரபத்தி பண்ணிவிட்டு, ஒருநாளும் தூமசகடத்தைக் கண்ணெடுத்துப் பாராத பரமைகாந்தி ஸார்வபௌமனாயிருந்தபோதிலும் ஸ்ரீ ந்ருஸிம்ஹாராதநத்தைப்போலவே பரமை காந்தித்வத்தையும் உதறித் தள்ளிவிட்டுத் தூமசகட மார்க்கமாக எழுந்தருளும்போது, திருக்குறுங்குடி நம்பியும் ஆபத்காலிகமான இந்த ஸ்வதர்ம த்யாகத்திற்கு ப்ராயஶ்சித்தமாகத் தம்மிலும் சீரியதான ஸ்ரீபாஷ்யாதி ஸ்ரீகோசங்களை மறக்கும்படி செய்து, ஊருக்கு எழுந்தருளியானவுடனே ப்ரஸித்த நிமித்தத்திற்கு ப்ரஸித்த ப்ராயஶ்சித்தத்தையும் செய்துவைத்தார். அந்த ஸமயம் தாயாருக்குத் திருமேனி பாங்காகிவிட்டது. அப்படியிருந்தும்: காணமற்போன ஸ்ரீ பாஷ்யாதி ஸ்ரீ கோசங்களை நினைந்து நினைந்து உள்ளுருகி ஸ்ரீ பாஷ்யகாரரிடத்தில் ஸ்ரீ பாஷ்யாதி ஸ்ரீ கோசங்களை தமக்கு ப்ரஸாதிக்கும்படி ப்ரார்த்தித்துக்கொண்டிருந்தார்.

'யண் ப்ரகாசம்' முதலான க்ரந்தங்கள் அருளியது

அடுத்த நந்தன வருஷம் சித்திரை மாதத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு உத்ஸவம் ப்ரஸக்தமானவளவில், உத்ஸவார்த்தமாக எழுந்

தருளியிருக்கும் பாகவதோத்தமர்களில் சிலர் ஸ்ரீமந் நிகமாந்தமஹா தேசிகாநுக்ருஹீதமான அதிகரண ஸாராவளியில் “த்ருஹோ:கஸ்ய ஷஸாஸ்த்ரம்” என்கிற ஸ்லோகத்தில் ‘த்ருஹோ:’ என்ற பதத்தில் “ந ஹிம்ஸ்யாதிதி” என்ற நிஷேத மிருக்கும்போது ‘யண் எப்படி வரலாம்? என்ற ப்ரஸ்நத்திற்கு ஸமாதாநமாக நம் ஸ்வாமியும் ‘யண் ப்ரகாஶம்’ என்ற க்ரந்தத்தை (ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகனைப்போல் ஸ்ரக்தரா வ்ருத்தத்தில் ஸ்வாமிக்கு அதிக திருவுள்ளமாகையால்) ஆறு ஸ்ரக்தரா வ்ருத்தத்தால் அருளிச்செய்து பிறகு அதற்கு வ்யாக்யாநத்தையும் அருளிச்செய்தார். இம்மாதிரியே சில தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களால் அப்போதைக்கப்போது ஆக்ஷேபிக்கப்பட்டு, அவர்களின் ஸமாதாநார்த்தமாக ‘தந்த்ரதார ந்யாயஸார:, தந்த்ரதார ந்யாய வாக்யம், ந்யாயஸித்தாஞ்ஜந ஸம்ரக்ஷண:, த்ராவிடாவிஸஹித நிஷேத, ரஹஸ்யரக்ஷா, ஸூத்ராத்வர பணியம், ஶுஷ்காந்ஸாதாவாதபரீக்ஷா, தாராயணஸார:, தாராயணஸாரஸங்க்ரஹ’ இவை முதலான அநேக க்ரந்தங்களை ஸ்வாமி அருளிச்செய்தார். இவைகளைத் தவிர மற்றும் அநேக ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் அருளிச்செய்ததுண்டு. அவைகளை அந்தந்த க்ரந்தநிர்மாண காலம் ப்ரஸக்தமானபோது நிரூபிப்போம். மற்றும் ஸ்வாமி அருளிச்செய்த க்ரந்தங்கள் ஸ்தோத்ர ரீதியில், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர வைபவ சந்த்ரிகா, ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமாகவும், ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் விஷயமாகவும் த்ருஷ்டி என்ற ஸ்தோத்ர ஜாலம், ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவ சந்த்ரிகை முதலானவை.

மறுபடி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோச ப்ராப்தி

இப்படி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோச நாசத்தா லுண்டான சோகத்துடன் எழுந்தருளியிருக்கையில், நந்தன வூ கார்த்திகைமீ வந்துவிடவே, அந்த ஸமயத்தில் ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரின் திருவவதார மஹோத்ஸவத்தைப் பத்து நாள் தொடங்கி ப்ரபந்த பாராயணம் வேத பாராயணம் க்ரந்த சதுஷ்டய பாராயணம் பண்ணிப் பத்தாவது திநத்தில் ஸ்ரீபாஷ்யத்தையும் ஸமாபநம் செய்வது வழக்கமாகையினால், அதற்கு ஸ்ரீ கோச மில்லையேயென்று விசாரப்பட்டுக்கொண் டிருக்குங் காலத்தில், ஏற்கெனவே ப்ரார்த்திக்கப்பட்டிருந்த ஸ்ரீ பாஷ்டகாரரும் அந்த உத்ஸவ ஆரம்ப திநத்திலேயே யாரோ ஒரு ஸ்ரீ வைஷ்ணவரைக்கொண்டு ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீகோசத்தை ஸ்வாமி திருக்கைகளில் ஸமர்ப்பிக்கும்படி செய்ய, ஸ்வாமியும் அதிஸந்துஷ்டராய் அதை வாங்கி ஶிரஸா வஹித்து, அன்றைக்கே பாராயணம் செய்யத் தொடங்கிப் பத்தாவது நாள் ஸமாபநம் செய்தார். இந்த க்ருதஜ்ஞதையைக்கொண்டு அடுத்த மார்கழி மாதத்தில் ‘ஸ்ரீ பாஷ்யகார ஸுப்ரபாதம்’ என்று ஓர் ஸ்தோத்ரம் அருளிச்செய்யப்பட்டுத் தினந்தோறும் அநுஸந்திக்கப்பட்டது.

பகவத் விஷய காலக்ஷேபம் செய்தருளியது

அடுத்த தை மாதத்தில் ஸ்ரீ தேவப்பெருமாள் மங்களாசாஸநத்திற்காகக் காஞ்சிபுரம் எழுந்தருளிக் கொஞ்சகாலம் அங்கேயே வஸித்துக்கொண்டிருக்கும்போது, சுண்டப்பாளையத்திலிருந்து சில ஸ்வாமிகள் வந்து தங்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் ப்ரஸாதிக்கவேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமியைப் ப்ரார்த்தித்தார்கள். அப்போது அடியேனும் ஸந்நிஹிதனாக இருக்கும்படி பாக்யம் பெற்றிருந்தபடியால், அந்த ஸமயம் தைவாதீநமாகத் திருப்புல்லாணி ஸ்ரீ ரகுபதி ஐயங்காரும் வந்தபடியால், நாங்களெல்லோரும் கூடி ஸ்ரீமத் பாஷ்யத்தை ஶாந்தி பாடத்துடன் ஸேவிக்கப் பெற்றோம். அடுத்த விஜயவஸ ஆனிமீ கோடை உத்ஸவத்தில் ஸ்ரீ பாஷ்யம் முடிந்தவுடன் சாற்றுமுறையும் செய்யப்பட்டது. அந்த வருஷம் கார்த்திகைமீ நடக்கவேண்டிய ஸ்வாசார்ய திருநக்ஷத்ரோத்ஸவத்தையும் தேவப்பெருமாள் ஸந்நிதியிலேயே செய்தருளியான பின்பு, தநுர்மாஸாராதநார்த்தமாக ஸ்ரீ பெரும்பூதூருக்கே எழுந்தருளி, அங்கு நடக்கும் பகற்பத்து இராப்பத்து உத்ஸவங்களை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கையில், இராப்பத்து சாற்றுமுறையாய் ஆழ்வாரும் திருவடி தொழுது மறுபடி லோக ஸம்ரக்ஷணார்த்தம் எழுந்தருளும்படி ப்ரார்த்திக்கப்பட்டு எழுந்தருளும் ஸமயத்தில், ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் வந்து திருவாறாயிரப்படியுடன் கூடிய திருவாய்மொழி ஸ்ரீகோசத்தை ஸமர்ப்பிக்கவே ஸ்வாமியும், 'தந்யோஸ்மி' என்று ப்ரதிக்ரஹித்து, இதை ஸேவிக்கும்படி ஸ்ரீ பாஷ்யகாரர் நியமநமெனத் திருவுள்ளம் பற்றி "ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்" என்கிற ஶ்ருதிப்படி ப்ரமாண பரவசராகையால், தைமீ அநத்யயநம் கழித்தவுடனேயே தமக்கு ஆசார்ய குலோத்பந்நராய்ப் பகவத் விஷயத்தில் அதிப்ரவீணராய்த் திருக்கச்சி நம்பியின் அவதார ஸ்தலமான பூவிருந்தவல்லியில் வஸிப்பவருமாய்த் தமக்கு ஸதீர்த்தருமாய் வயோவ்ருத்தருமான ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்யர் என்கிற ஸ்வாமியிடத்தில் திருவாறாயிரப்படி காலக்ஷேபத்தைச் செய்தருளினார். இவ்விஷயம் பட்டாபிஷேக ஸ்ரீமுகத்தில் *9, 10-ஶ்லோகங்களில் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸேதோர்வ்யாப்ததீர்த்ரப்ரஸ்ருதயதியசோ வாரிராசேஸ்ததோऽநந்தஸாது
கஶ்ரீமத்பாஷ்யகோசம் ஸவிதவநயநேநாஜேயமந்த்ராஜேய |
ஶ்ருத்வா ஜந்தூத்தவாநாம் நிஜகுலதிலகம் ஆவயிக்வா ஸமக்ரம்
பாஷ்யம் வ்யாபயந்தாவிவவஸிதஸ வயேவாஸாயயஜ்ஞ ‖ 9.

ஶ்ராவஸ்ரமோ யதிந்த்ரவதிஹம் ஶாமநுஶீஷேயஶாஸே
த்ரிம்ஶத்ஸ்லோக்யா ப்ராஸாத்ய ஶ்ரீதிஶிவரமநோ: ஸங்க்ஷி
ஸம்வஸ்த்ரஹாவய |
கந்யஷ்டிநாமநுஶீஷேத்ருஶிகிமவேஶிஸாவஸாநே ஶாஸி
ப்ராக்ஹமஹாவே யதீந்த்ராஞ்ஜிஜநவதஸ்ஸாமஜ்ஞாம் ஸமீகாய ‖ 10.

[தொடரும்]

OFFICE OF THE REGISTRAR
13 AUG 1943
MADRAS

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸத் ஸம்ப்ரதாய தீபம்

[வித்வான் சிலுக்கூர் ஸ்ரீ உப. மா. வேங்கடராகவாசார்ய ஸ்வாமி,
சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம் & ஏஜெண்ட், ஹைதராபாத் ஸ்டேட்
கத்தவால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி]

ஸர்வேஸ்வரனை ஸ்ரீமந் நாராயணன் 'ஆலமாமரத்தி னிலைமேல் ஒரு பாலகனாய்' என்று ஆழ்வார் அநுஸந்தித்தபடி ப்ரளய காலத்தில் உலகம் ஏகார்ணவமாக இருக்கும்பொழுது தான் ஆலிலையின்மேல் ஒரு பாலகனாய் சயனித்துக்கொண்டிருக்க, அம்மஹா ப்ரளயத்தில் 'தம: பரே தேவ ஏகீ பவதி' என்று சொன்னபடி ஜீவராசிகளெல்லாம் தமோ ரூபமாய்த் தன்னிடம் லயித்திருக்கும்போது அஜ்ஜீவராசிகளைப் பார்த்து,

"க்ஷபிதவிஶிஷ்டாந் ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா |
கரணகலேபரயோகம் விதரஸி வ்ருஷஶைலநாத கருணே த்வம் ||"

என்று துக்கித்து, அதி தயாமூர்த்தியாகையாலே அஜ்ஜீவராசிகளைக் கரையேற்ற எண்ணங்கொண்டு, அவைகளுடைய ஜந்மாந்தர கர்மாநுகுணமாக அவைகளை ஶரீரேந்த்ரியங்களோடு சேர்ப்பிக்கிறான்.

"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: |
ஸாத்த்விகஸ்ஸ து விஜ்ஞேயஸ்ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: ||"

ஜநந காலத்தில் எவனைப் பகவான் குளிரக் கடாக்ஷிக்கிறானோ அவன் ஸதாசார்ய கடாக்ஷத்தால் ஸத்வோத்தரனாக இருந்து மோக்ஷார்த்த சிந்தநம் செய்வானென்று ப்ரமாணம் சொல்லுகிறது. அதற்கும் ஜந்மாந்தர ஸுக்ருத விசேஷமே காரணமென்று சொல்லவேண்டும். இல்லாவிடில், ஒருவனை ஜநந காலத்தில் பகவான் குளிரக் கடாக்ஷிப்பதென்றும், மற்றொருவனைக் கடாக்ஷிப்பதில்லை யென்றும் சொன்னால் வைஷம்ய நைர்க்ருண்யங்கள் ப்ரஸங்கிக்கும். வைஷம்ய நைர்க்ருண்யங்களைப் பகவானுக்குக் கல்பிக்க யோசனை செய்வதுகூட தோஷாவஹம். 'வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்' [பகவானுக்கு வைஷம்யமும், தயை யின்மையும் இல்லை; அவன் ஜந்மாந்தர கர்மாநுகுணமாக ஜந்மாதிகளைச் செய்து வைக்கிறான்.] என்று வ்யாஸ பகவான் அறுதி யிட்டான்.

இப்படி ஜீவராசிகளை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற்ற எண்ணங்கொண்டு பகவான், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் | ததைக்ஷத | பஹு ஸ்யாம் ப்ரஜாயேய" என்று சொன்னபடி தான் ஸூக்ஷ்ம சேதநா சேதந விஶிஷ்ட ப்ரம்ஹமாக இருந்துகொண்டு

ஸ்தூல சேதநா சேதந விசிஷ்ட ப்ரம்ஹமாக ஆகவேண்டுமென்று ஸங்கல்பித்துக்கொண்டு பஞ்ச பூதங்களையும் தந்மாத்ரைகளையும் க்ரமமாய்த் தத்வ ஜாலங்களை ஸ்ருஷ்டித்து ஜீவராசிகளுக்குக் கரண களேபர யோகங்களைச் செய்து, 'அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா' என்று சொன்னபடி, தான் அவைகளுக்குள் புகுந்து நியமந கர்த்தாவாக இருக்கிறான். பகவான் கீதையில் அர்ஜுநனைப் பார்த்து,

"ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶே(அ)ர்ஜுந திஷ்டதி ।
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா ॥"

என்று அருளிச் செய்தார். ஜீவாத்மாக்களுக்கு ஹஸ்த பாதாதிகள் சேஷபூதமாயிருந்து எப்படி நியாம்யமாக இருக்கின்றனவோ, அப்படியே ஸர்வ ஜீவராசிகளும் பகவானுக்கே சேஷபூதமாக இருந்து பகவந் நியாம்யங்களாக இருக்கின்றன. இதையே "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம்" என்றும் ஶ்ருதி சொல்லுகிறது. 'மாஸர்வ தூதஸ்ஸர்வஹ்ருத்கதாநாம் ஸர்வாத்மநாம் | அஹம்ஸ்ஸகலாவி தேவமாய இதி ஈஶ்வரோ நாராயண:' என்று சங்கரனும் அறுதியிட்டான். நம் ஸம்ப்ரதாயத்தில் பகவானுக்கும் ஜகத்திற்கும் ஶரீர ஶரீரி பாவம் முக்யமானது.

"யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் யம் ப்ருதிவீ ந வேத ।
ய: ப்ருதிவீமந்தரோ யமயதி ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத: ॥"

[எவனுக்கு ப்ருதிவீ சரீரமோ, சரீரமான ப்ருதிவிக்கு எவன் அகோசரனோ, அப்படிப்பட்ட சரீரியானவனை எந்த ப்ருதிவியால் அறியமுடியவில்லையோ, அப்படிப்பட்ட ப்ருதிவிக்குள் புகுந்து எவனொருவன் நியமிக்கிறானோ, அவன் உனக்கு நித்யனான ஆத்மா அந்தர்யாமி] என்று அந்தர்யாமி ப்ராம்ஹணம் சொல்லுகிறது. அப்படிப்பட்ட பகவான், "ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" என்று சொன்னபடி. அதாவது: "மாயா வயுநம் ஜ்ஞாநம்" 'ஆத்மமாயயா' என்றால் ஸங்கல்பத்தினால்தானே 'ஸம்பவாமி யுகே யுகே' என்று சொல்லியபடி. ஓர் அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தைப் பூண்டு என்றபடி.

"இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: ।
ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர் மாம்ஸமேதோஸ்திஸம்பவா ॥"

தானே இச்சையாலே அபிமதமான ஓர் திவ்ய தேஹத்தை ஸ்வீகரிக்கிறான். அவனுடைய சரீரமானது நம்முடைய சரீரம்போல், மாம்ஸம் எலும்பு முதலானவைகளால் உண்டானதல்ல; அஜஹத் ஸ்வஸ்வபாவனாக அவதரிக்கிறபடியாலே அது அப்ராக்ருதமான திருமேனி. இப்படி திவ்யமங்கள விக்ரஹத்தைப் பூண்டு, 'பரித்ராணாய ஸாதூநாம்'

என்று ப்ரதாநமாக ஸாது பரித்ராணம் செய்யப் புக்குத, ஷர்த்தமாக ஆநுஷங்கிகமாக துஷ்ட நிரஸநம் செய்து தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக யுகந்தோறும் அவதரிக்கிறான்.

இப்படிப்பட்ட பகவான் ஜ்ஞாநோபதேசம் பண்ணும் ப்ரகாரங்கள் பல உள. அவன் ஸ்வயமாக சதுர்முகனான ப்ரம்ஹாவுக்கு வேதங்களை உபதேசித்தான். ரஜஸ் தமோ ரூபியான மதுகைடப ரென்கிற அரக்கர்கள் வேதத்தை அபஹரித்துச் செல்ல, தான் அப்போது ஸத்வ மயமான ஹயக்ரீவாவதாரத்தை ஸ்வீகரித்து அவ்வஸுரர்களை வென்று ப்ரஹ்மாவுக்கு வேதங்களைத் தந்தருளினான். இவ்வர்த்தமானது

“தஸ்மை பவாந் ஹயஶிரஸ்தநுவம் ஹி பிப்ரத்-
வேதத்ருஹாவதிபலௌ மதுகைடபாக்யௌ |
ஹத்வாऽநயச்ச்ருதிகணாம்ஶ்ச ரஜஸ்தமஶ்ச
ஸத்த்வம் தவ ப்ரியதமாம் தநுமாமநந்தி ||”

என்கிற ஸ்ரீ பாகவத வசநத்தால் வ்யக்தமாகிறது. இன்னும் ஹம்ஸ மத்ஸ்ய நரநாராயணாத்யவதாரங்களைச் செய்து துஷ்டர்களை வென்று ஸாது பரித்ராணம் செய்து தத்வஹித புருஷார்த்தங்களை லோகோபகாரமாக ப்ரகாசிப்பித்து வந்தான். இப்படிச் செய்தும் பகவானுடைய மஹிமையை அறிந்துகொள்ளாத ராவண ஹிரண்ய கம்ஸ சிசுபாலாதி ராக்ஷஸர்கள் பகவானைத் தங்களைப்போல் ஓர் மனிதனாகவும், பகவச் சரீரத்தைத் தங்கள் சரீரங்கள்போல் ப்ராக்ருத சரீரங்க ளென்றெண்ணி அவரை எதிர்த்துச் சண்டைசெய்தும் தாராபஹரணாதியான மஹா பாபங்களைச் செய்து கடைசியாகத் துன்பத்தை அடைகிறார்கள். குஹ அக்ரூர சபர்யாதி சில மஹாங்களோ வென்றால், பகவானுடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்துகொண்டு, ‘ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்’ என்றும் ‘மநோஜ்ஞரூபஸௌந்தர்யவாமத:’ என்றும் சொல்லுகிறபடியே பகவானுடைய ரூபம் ஔதார்யம் ஸௌலப்யம் பரத்வம் முதலான திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்டு ‘வாயவனை யல்லது வாழ்த்தாது’ என்பது போலும், ‘தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி’ என்றும் சொல்லுகிறபடியும், ‘த்ருஷ்டியமாயதே க்ஷணோ வேதா’ என்றபடி அவனை ஒருக்ஷணம் விட்டுப் பிரிந்தால் ஒரு யுக காலம் பிரிந்தவர்போல் எண்ணங் கொண்டவர்களாய்,

“வரம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: |
ந ஶௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைஶஸம் ||”

ஒரு க்ஷணங்கூட பகவச் சிந்தநம், பகவத் கீர்த்தநம் இவையில்லாத ஜனங்களுடன் கூடியிருப்பதைவிட அக்நிக் கூட்டின் மத்யத்திலே ஸ்திரவாஸம் செய்வது நலமென்று சொன்ன அபிஸந்தியை யுடையவர்களாய், ‘வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது’

என்பது போலும் ஸதா பகவானையே த்யானித்தும் ஸ்துதித்தும் வணங்கியும், ‘உண்ணும் சோறும் பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்’ என்று சொல்லுகிறபடியே பகவானைத் தாரக போஷக போக்யமாக நினைத்து க்ருதக்ருத்யர்களாக ஆகிறார்கள். இப்படிப் பகவான் தான் அஜஹத் ஸ்வஸ்வபாவனாய் அப்ராக்ருதமான திருமேனியுடன் அவதரித்தும், சில மூடர்கள் அவனுடைய மஹிமாதிஶயத்தைத் தெரிந்து கொள்ளாமல் அக்ருத்யகரண க்ருத்யாகரணங்களைச் செய்து வேத ஶாஸ்திராதி ப்ரமாணங்களில் அவிஶ்வாஸம் கொண்டு பாபஶதங்களைச் செய்து துன்பத்தை யடைவதைப் பார்த்து ‘என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்’ என்கிற ஸ்வபாவமுள்ளவனுகையாலேயும் ‘ந கஶ்சிந்நாபராத்யதி’ என்று ஸாபராதர்களான அரக்கர்களிடமும் தயையைப் பாராட்டிப் பக்தரக்ஷணார்த்தமாகவே ‘அகலகில்லேன்’ என்றும், ‘க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வயஶ்சம் வக்ஷஸ்யுபாஶ்ரயாம்’ என்றும் சொல்லுகிறபடி, பகவானுடைய திருமார்பிலேயே நித்யவாஸம் செய்யும் பெரிய பிராட்டியாருடைய நாயகனுகையாலே கருணை பூண்டு அப்படிப் பட்ட ஜீவாத்மாக்களையும் உஜ்ஜீவிக்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணியும், நாம் சில மனிதர்களாக அவதரித்து. அம்மனிதர்களைக் கொண்டே அம்மூடர்களுக்கு ஹிதோபதேசம் செய்து வைத்தால் ‘ஸமாநஶீலேஷு விஶ்வஸிதி’ என்கிற ந்யாயாநுஸாரமாக மனிதருக்கு மனிதரிடத்தில் ஒருவேளை விஶ்வாஸம் பிறக்கலாமென்று எண்ணியும்,

‘கலௌ புநஃ பாபரதாபிபூதே ஶ்ரீமாந் ஹரிஃ ஸந்ததபோதஶக்த்யா |
கலாவதீர்ணோ ஜநாந் உத்தரிஷ்யதி ||’

[கலியுகத்தில் சில ப்ராணி வர்க்கங்களில் பகவான் அநுப்ரவேஶித்து வேண்டிய ஸத்கார்யங்களைச் செய்கிறான்] என்றும்,

“ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும் |
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ||”

ஸ்ரீமந் நாராயணன் தான் சில மானிட ரூபங்களை ஸ்வீகரித்து, ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கிற ஜந்துக்களை ஶாஸ்த்ரமாகிற கையாலே கரையேற்றி ரக்ஷிக்கிறான். அதாவது: ஆசார்ய வ்யாஜத்தாலே ஶாஸ்த்ரங்களைப் போதிக்கச் செய்து அவற்றினடியாகத் தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிவைத் தந்தருளி, ‘யூயம் அர்த்தகாமபரா வயம் நாராயணபரா வயம்’ [நீங்கள் அர்த்த காமங்களில் ஆஸக்தியுள்ளவர்கள்; நாங்களோ நாராயண பராயணர்களாக இருப்பவர்கள்; ஆகையால் உங்களுக்கும் நமக்கும் ஸம்பந்தமில்லை காணும்] என்னும்படியான அறிவை யுண்டு பண்ணுகிறான். இவ்வாறாகத் தெளிவு பிறந்த ஜீவன் [‘அஹேரிவ கணாத்பீதஃ’] ஸர்ப்பத்தை கண்டால் நடுங்குவது போல் ஶௌரிசிந்தா விமுகமான கூட்டத்தைக் கண்டு பயந்தவனாய், ‘ஸந்திஃ கார்யஃ த

ஸம்ஶ்ரய ' 'நாஸத்பி: கிம்சிதாசரேத' என்றும் 'வோஜ்யஞ்ச: ஸர்வ ஸ்ரய' [மஹான்களோடே சேர்ந்திருக்கவேண்டும்; துஷ்டர்களுடன் ஸஹவாஸம் செய்யலாகாது.] என்றும் சொல்லுகிறபடி, ஸத்ஸங்கத்தினால் ஸம்ஸார நிஸ்ப்ருஹனாய் அவ்வாசார்யன் மூலமாக ஶரண்யனான ஸ்ரீமானான நாராயணனிடம் தன் ஆத்மபரத்தை ஸமர்ப்பித்து ஆர்த்த ப்ரபத்தி பண்ணியிருந்தானேயாகில் உத்தர க்ஷணத்திலேயே கர்மாந்தரங்களினின்றும் விடப்பட்டவனாய், ஸ்ரீமந் நாராயணனுடைய நிரங்குஶமான க்ருபாபாத்ரமாய், ப்ரக்ருதி ஸம்பந்தமற்றவனாய் ஸுஷும்நா நாடி மூலமாகக் கபாலம் பிளக்கப்பட்டு வெளிக் கிளம்பி, ஆதிவாஹிக கணங்களாலே வழி காட்டப்பட்டு, அண்டகடாஹ பஹிர்ப்பூதமாய் 'ஸக்ருத்விபாதோஹ்யேவைஷ ஹ்ஹலோக:' ஸவதி ' என்னுமாப் போலே ஒரு பகலாய் தேஜோமயமாயும், 'ஸஹஸ்ரஸ்தூணே விமிதே த்ருடே உக்ரே யத்ர தேவா நாமதிதேவ ஆஸ்தே' ஸஹஸ்ர ஸ்தம்பாலங்க்ருதமாய் அபுநராவ்ருத்தி லக்ஷணமாய் ஸ்வர்ணச் சாயையுடைய மாமணி மண்டபத்தில் நித்ய முக்தர்களோடும் பெரிய பிராட்டியாரோடும் கூடியிருக்கிற பகவத் ஸந்நிதியை 'ஶதம் மாலாஹஸ்தா:' [சிலர் மாலைகளைக்கொண்டும் சிலர் உபாயநங்களைக் கொண்டும் எதிர் கொண்டழைக்கிறார்கள்] என்றபடி அவ்வோ முக்தர்களாலே எதிர்கொண் டழைக்கப்பட்டு அடைந்தவனாய்ப் பகவத் கடாக்ஷ பாத்ரனாய் அவராலே ஸஸ்மிதம் அழைக்கப்பட்டு நித்ய முக்தர்களொடொக்க 'ருக்ஷணோ ருக்ஷிவஸம்வனு:' என்கிறபடியே பகவத் கைங்கர்யமாகிற ஸாம்ராஜ்ய லக்ஷ்மியை அடைந்து ஸுகமாக இருக்கிறான். இவ்வர்த்தங்கள்: 'ஸஹ்ரும ஹாஜவ நிஸ்ருஹ:' 'ஸுகேநாவிஸதி ந வாவிஸ வக்ஷ' என்பதாலும், 'சூழ்ந்தகன் றாழ்ந் துயர்ந்த' என்கிற நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளாலும் வ்யக்தமாகின்றன.

'ஸாக்ஷாந்நாராயணோ தேவ:' என்கிறவிடத்தில் 'ஸாக்ஷாத்' என்கிற சப்தம் கவனிக்கத்தக்கது. இப்படி அவன் செய்வதற்கு மற்றொருவருடைய ப்ரேரணையில்லை யென்று சொல்லலாம். இவ்வர்த்தமும் காருண்யாத் என்பதால், (தயையாலேதான் செய்கிறானென்று) வ்யக்தமாகிறது. ஆகையாலே, 'ஸாக்ஷாத்' சப்தமானது க்ருஷ்ண நாரஸிம்ஹாத்யவதாரங்கள்போலே பூர்ணகலா விசிஷ்டனாகவே பகவான் ஆசார்ய ரூபமாக ஆவிர்ப்பவிக்கிறானென்று சொல்லலாம். பாபிஷ்டரான க்ஷத்ர பந்து முதலியவர்கள் ஆசார்யவத்தையினாலன்றோ ஸத்கதி யடைந்தார்கள். ஒருவனுக்கு ஆசார்ய னன்றியிலே பகவான் ப்ரஸந்நனாக மாட்டான். பகவதபிப்ராயாவிஷ்கார மன்றியிலேயே ஆசார்யன் ஒருவனைக் கரையேற்ற வல்லவன். இங்கு 'ஸித்திர்பவதி வா நேதி, ஸம்ஶயோச்யுதஸேவிநாம் ந ஸம்ஶயோஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம்' [பகவானை ஆஶ்ரயித்தால் பல ஸித்தியில் ஸம்ஶயம் உண்டு. பகவத் பக்தனான ஆசார்யனை

ஆஶ்ரயித்தவர்களுக்குப் ஃபலஸித்தி நிச்சயமாய் உண்டு] என்று ப்ரமாணம் கூறுகிறது. பகவதாராதநத்தைவிடப் பாகவதாராதநம் விசேஷ மென்று ப்ரமாணம் கூறுகிறது. இங்கு 'ஸய ஃ்ராவீநத ஸம்ப வக்த்ர' இத்யாதியான ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் அநுஸந்திக்கத் தக்கவை. ஆசார்யர்கள் விஷயத்தில் இன்னும் அநேக ப்ரமாணங்கள் உள. [அவைகளை விஸ்தர பயத்தால் இங்கு சொல்லவில்லை. அடியேனால் எழுதப்பட்ட ஆசார்ய குண ப்ரதீபம் என்னும் க்ரந்தத்தில் அவைகளைக் காணலாம்.]

இப்படியாக மஹிமை வாய்ந்த 'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:| க்வசித் க்வசிந் மஹாபாக த்ராமிடேஷு ச பூரிஶ:| தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ| காவேரீ ச மஹாபாக ப்ரதீசீ ச மஹாநதீ| யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேஶ்வர' [கலியுகத்தில் நாராயணைகபராயணர்களாகச் சில மஹான்கள் சிற்சில இடங்களில் அவதரிக்கப்போகிறார்கள். த்ராமிட தேசத்திலோ வென்றால்: தாம்ரபரணீ, வைகை, பாலாறு, காவேரீ முதலான நதீ தீரங்களில் அநேக மஹான்கள் அவதரிக்கப் போகிறார்கள்] என்று வ்யாஸபகவான் அறுதியிட்டபடி சில ஆசார்யர்களைப் பகவான் அநுப்ரவேசித்து அவதரிப்பித்தான். அப்படி அவதரிப்பித்த ஆசார்யர்களில், பொய்கை முனி, பூதத்தார், பேயாழ்வார், என்றும் முதலாழ்வார்கள் என்றும் சொல்லப்பட்டவர் இம்மூவர். இம்மூவரும் நம் ஸமயத்திற்கு மிகவும் உபகரித்தார்கள்.

இவர்களில் பொய்கையாழ்வார், துவாபர யுகத்தில் 7—லக்ஷம் வருஷங்கள் கழித்து எட்டு லக்ஷத்து அறுபத்திரண்டாயிரத்துக்கு மேல், ஸித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாஸம் செவ்வாய்க்கிழமை கூடிய சுக்லாஷ்டமி திருவோண நக்ஷத்ரத்தில், 'நகரேஷு காஞ்சீ' என்றும் 'முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி' என்றும் சொல்லப்பட்ட 18 திவ்ய தேசங்களடங்கிய காஞ்சீபுரத்தில் யதோக்தகாரி ஸந்நிதிக் கடுத்த பொய்கைப் புஷ்கரணியில் பூத்த பொற்றாமரை மலரில் பாஞ்சஜந்யாம்சராக அவதரித்து, எம்பெருமானை த்யானித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இதற்கு மறுநாள் அவிட்ட நக்ஷத்ரத்தில் கதாம்சரான பூதத்தாழ்வார் திருக்கடன்மல்லை யென்கிற மஹாபலிபுரத்தில், பகவானுடைய நந்தன வனத்தில் குருக்கத்தி மலரில் அவதரித்து எம்பெருமானை த்யானித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார். இதற்கு மறுநாள் சதய நக்ஷத்திரத்தில், ஸ்ரீ நந்தகாம்சரான பேயாழ்வார், திருமயிலை என்னும் திவ்ய தேசத்தில் ஒர் கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப்பூவில் அவதரித்து ஸ்ரீமந்நாராயணனை த்யானித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார். இவ்வாழ்வார்கள் மூவரும் ஜீவாத்மாக்களுக்கு ஞானத்தை ப்ரவசநம் பண்ணத் திருவுள்ளங்கொண்டு திவ்ய தேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸநம் செய்யவேண்டுமென் றெண்ணியும், தங்கள் தங்கள் அவதார ஸ்தலங்களை விட்டுப் புறப்பட்டுத் திவ்யதேச யாத்ரை செய்து

வருகையில், பெண்ணையாற்றின் தென்கரையில் ஆயனர் எழுந்தருளி யிருக்கும் திருக்கோவலூருக்கு ஒருவரை யொருவர் அறியாதவர்களாய் வந்து சேர்ந்து எம்பெருமானை மங்களாசாஸநம் செய்துக்கொண்டிருந் தார்கள். ஒருநாள் ஸூர்யாஸ்தமநமான பின்பு பொய்கையாழ்வார், ஒரு பாகவதருடைய திருமாளிகையில் இடைகழியில் சயனித்திருந்தார். பின்பு பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் தனித்தனியாக அதே திருமாளி கைக்கு வந்து அவ்விடைகழியில் சேர்ந்து ஒருவரையொருவர் விசாரித்துக் கொண்டிருக்க, இவ்வாழ்வார்கள் மூலம் ஆத்மோஜ்ஜீவநம் செய்ய இது தான் ஸமயமென்று எண்ணி ஸ்ரீய:பதியான பகவான் ஓர் பெரியவர் ஷத்தை யுண்டாக்கித் தானும் அவ்விடைகழியை யடைந்து, அவர்களுக்கு அதிக நெருக்க முண்டாக்கினர். முன்னில்லாத இப்படிப்பட்ட நெருக் கம் இப்பொழுது ஏதென்று ஆச்சர்யப்பட்டுப் பொய்கையாழ்வார், "வையம் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக, செய்ய சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொல்மாலை, இடராழி நீங்கு கவே யென்று" என்றாரம்பித்து முதல் திருவந்தாதி என்கிற பெயரால் 100 பாட்டுப் பாடினர். இப்பாட்டின் பொருள் :—இந்த உலகிலுள்ள அஞ்ஞானம் நீங்கவேண்டுமென்று தேஜோரூபியான பகவானுடைய திரு வடித் தாமரைகளில் பூலோகமாகிற தகளியில், ஸமுத்ரமாகிற நெய் யைச் சேர்த்து, ஸூர்ய சந்த்ரர்கள் ப்ரகாசமாகவுமுள்ள ஓர் சொல் மாலையைச் சூட்டினேன் என்பது.

இவ்வாழ்வார் முதல் திருவந்தாதியால் பகவானே ஜகத் காரண மென்றும், நித்ய முக்தர்களுக்கு ஸேவ்யனுனவன் இவனே யென்றும், பகவத்பக்தியும் தந்நாம ஸ்மரணமும் மோக்ஷஸாதநமென்றும் 'நாவாயி லுண்டே நமோ நாராயணவென்று' இவைமுதலான பாட்டுக்களினல் உலகத்தாருக்கு ஞானோபதேசம் செய்தார். பூதத்தாழ்வார் "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை யிடுதிரியா நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு ஞானத் தமிழ்புரிந்த நான்" என்றாரம்பித்து இரண்டாந் திருவந்தாதி என்கிற பெயரால் 100–பாட்டுப் பாடினர். இதின் அர்த்தம் :—பக்தியைத் தகளியாகவும், ஆசையை நெய்யாகவும், மனதைத் திரியாகவும் பாவித்து, ஸ்ரீமந் நாராயணனை அறிய விளக்கேற்றினேன் என்பது. இவ்வாழ்வார் பக்தியோகத்திற்கு- வேண்டிய அஷ்டாங்கங்களை இத்திருவந்தாதியில் பேசி, பகவானுடைய திவ்ய சேஷ்டிதங்களையும் ப்ரதிபாதித்து லோகோஜ்ஜீவநம் செய்தார். இவ் விரண்டாழ்வார்களும் ஏற்றின இரா விளக்காலும் பகல் விளக்காலும் அஞ் ஞானமாகிற இருளற்றபடியால், பேயாழ்வார் எம்பெருமானை உள்ளபடி கண்டு, நிவ்ருத்தா ஜ்ஞாநாந்தகாரமுடையவராய்ப் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தையும் 'அகலகில்லே'னென்றும் 'க்ஷாஜிதெந ஸம் வூஷுவயடு௦ வக்ஷஸ்ஸூயாமூ' என்றும் சொல்லுகிறபடி, பகவா னுடைய திருமார்பில் பக்த ரக்ஷணர்த்தமாக நித்யவாஸம் செய்யும் பெரிய பிராட்டியாரையும் ஸாக்ஷாத்கரித்து, 'ஈவெளஷாயபூமாணெ:

வ~ம்ஸாழ்' என்கிறபடி ரூபௌதார்யாதி திருக்கல்யாண குணங்களாலே மோஹிதராய், ஆநந்த ஸாகரத்தில் மூழ்கினவராய், தத்பரீவாஹமாக லோகோஜ்ஜீவநத்தையு முத்தேசித்து, திருக்கண்டேன், "பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கனணி நிறமும் கண்டேன், செருக்கிளரும் பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன், என்னாழி வண்ணன்பால் இன்று என்று தொடங்கி 100 பாட்டால் மூன்றும் திருவந்தாதி என்கிற பெயரால் தேஹளீசனையும் மற்றும் சில திவ்ய தேசத் தெம்பெருமான்களையும் கவி பாடினர். இவ்வாறு இம்முதலாழ்வார்கள் மூவரும் இப்ரபந்தங்களை ஸம்ஸார தாப தப்தர்களான சேதநர்கள் நன்றாக அப்யஸித்துப் பகவத் ஸ்வரூப கல்யாண குணங்களையும் தெரிந்து கொண்டு மோக்ஷஸாம்ராஜ்ய லக்ஷ்மியை அடையவேண்டுமென்று கருணை புரிந்து இப்ரபந்தங்களைக் கவிபாடி இவ்வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு மிகவும் உபகரித்தார்கள்.

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரர் துதி

1. ஓதிவந்த சிறுவனது வாயில் வந்த
 வெள்ளியபே ராயிரத்தை யுகவா னாகித்
தீதுபுரி பொன்பெயரோ னசுரத் தெவ்வின்
 திறலாகங் கீண்டானை வணங்கு மெங்கோ
மேதினிக்கோர் திலகமெனத் திகழும் சிங்க
 வேழ்குன்றத் தாளரிப்பா னேய மிக்க
வாதிவண்சீர்ச் சடகோப னவனி போற்று
 மந்தணர்கோ வடியேனை யாளுங் கோவே.

2. எதுகிரியிற் கேசவனா ரென்னுஞ் செய்ய
 ரிழைத்தபெருந் தவப்பயனா யுதித்த வெங்கோ
வுதயஞ்செய் பானுவைப்போல் வளர்ந்து மிக்க
 வுயர்கலைக ளனைத்துமுணர்ந் துயர்ந்த வெங்கோ
துதிசெய்வா ருரைகளெல்லாங் குறிக்கும் மால்தன்
 துறக்கமெனும் பெரும்பதம்போற் றிகழுஞ் சிங்கப்
பதிவளருந் திருமாலார் பாதம் நண்ணிப்
 பார்புரக்க வந்தருள்கோ வெந்தன் கோவே.

3. பாவமெலாம் போக்குதலாற் பாரோர் போற்றும்
 பவநாசத் திருநதியின் றடத்திற் றோன்றி
தேவர்பிரான் மாலோலன் தானே ப்ரேஷத்
 திருமறுவை யளிக்கவுளங் களித்த வெங்கோ
யாவையுந்தான் படைத்தளித்துத் துடைத்து மேனாள்
 யாதினுக்கு முயர்ந்தபதத் தமர்ந்த நாதன்
மூவுலகுந் தொழநின்ற தாளே போற்றி
 முத்திவழி காட்டுங்கோ முனிவர் கோவே.

—திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. V. S. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

ஸ்ரீ:

ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

ஸ்ரீமத் ராமாயணம் யுத்த காண்டம் 131-வது ஸர்க்கத்தில்:

𑌤𑌤𑌃 𑌸 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌸𑌹 |
𑌰𑌾𑌮𑌂 𑌰𑌤𑍍𑌨𑌮𑌯𑍇 𑌪𑍀𑌠𑍇 𑌸𑌹𑌸𑍀𑌤𑌂 𑌨𑍍𑌯𑌵𑍇𑌶𑌯𑌤𑍍 ||
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 𑌜𑌾𑌬𑌾𑌲𑌿𑌰𑌥 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 |
𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌃 𑌸𑍁𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌗𑍌𑌤𑌮𑍋 𑌵𑌿𑌜𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ||
𑌅𑌭𑍍𑌯𑌷𑌿𑌞𑍍𑌚𑌨𑍍𑌨𑌰𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌿𑌨𑌾 |
𑌸𑌲𑌿𑌲𑍇𑌨 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌵𑌸𑌵𑍋 𑌵𑌾𑌸𑌵𑌂 𑌯𑌥𑌾 ||

[பிறகு ப்ரயத்நமுள்ள வ்ருத்தரான அந்த வஸிஷ்டர் ப்ராம்ஹணர்களுடன் ஸ்ரீராமனை ஸீதையுடன் ரத்நஸிம்ஹாஸநத்தில் அமர்த்தினர். வஸிஷ்டர் முதலிய எட்டு மஹர்ஷிகள், அஷ்ட வஸுக்கள், ஆயிரம் கண்ணுள்ள இந்த்ரனைப்போல் புருஷஸ்ரேஷ்டனை ஸ்ரீராமனை (ஸீதையுடன்) நிர்மலமாயும் வாஸனையுள்ளதுமான தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தனர்] என்று ஸூக்திகள் இருக்கின்றன. கிஷ்கிந்தா காண்டத்தில் ஸுக்ரீவனுக்கும், யுத்த காண்டத்தில் விபீஷணனுக்கும் பரதனுக்கும், உத்தர காண்டத்தில் ராவணனுக்கும் சத்ருக்நனுக்கும், சக்ரவர்த்தித் திருமகன் இளையபெருமாள், பரதன், சத்ருக்நன், இவர்களுடைய இரண்டிரண்டு குமாரர்களுக்கும் பட்டாபிஷேகம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடங்களில் அவர்களுக்குப் பார்யையுடன் பட்டாபிஷேகம் ப்ரதிபாதிக்கப்படவில்லை. இவ்விடத்தில் ஸீதையுடன் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் ப்ரதிபாதிக்கப்பட்டதற்குக் காரணமென்னவென்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு ஸ்ரீராமனுடைய ப்ரபாவத்தை அவலம்பித்து ஓர் ஸமாதாநமும், மநுஷ்ய பாவத்தை அவலம்பித்து மற்றொரு ஸமாதாநமும் சொல்லலாம். அதில் முதல் ஸமாதாநமாவது—பகவான் தன் விக்ரஹத்தில் ப்ரம்ஹசர்யாவஸ்தையிலும் உட்பட ஸ்ரீ விசிஷ்டனாகவே இருப்பதாக,

'𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑍇𑌨 𑌸𑌂𑌵𑍃𑌣𑍍𑌵𑌨𑍁 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌲𑌾𑌲𑌯𑌾'

இத்யாதி ப்ரமாணங்களாள் ஏற்படுவதாலும்,

'𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌃' 'அலகில்லே னிறையுமென் றலர்மேல் மங்கை யுறைமார்பா'

இத்யாதி ஸூக்திகளால் உபாய தசையிலும்,

'𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇' 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப'

இத்யாதி ஸூக்திகளால் பல தசையிலும் பகவான் லக்ஷ்மீ விசிஷ்டனாகவே ப்ரதிபாதிக்கப்படுவதாலும்,

'𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌰𑌾𑌘𑌵𑍇𑌣𑌾𑌹𑌂 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌭𑌾 𑌯𑌥𑌾'

'𑌨𑌿𑌤𑍍𑌯𑍈𑌵𑍈𑌷𑌾 𑌜𑌗𑌨𑍍𑌮𑌾𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 |
𑌰𑌾𑌘𑌵𑌤𑍍𑌵𑍇𑌽𑌭𑌵𑌤𑍍 𑌸𑍀𑌤𑌾 𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 ||
𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌚𑌾𑌵𑌤𑌾𑌰𑍇𑌷𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍇𑌷𑌾𑌽𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 |'

இத்யாதி ப்ரமாணங்களில் திவ்ய தம்பதிகளின் நித்யயோகம் கண்டோக்தமா யிருப்பதாலும், இவ்வர்த்தம் த்வய ப்ரதிபாத்யமா யிருப்பதாலும், அப்ருதக்ஸித்தையான

லக்ஷ்மியின் அவதாரமான ஸீதையை விலக்கி விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராம னுக்குப் பட்டாபிஷேகம் செய்யமுடியா தென்பதே. இதைத் திருவுள்ளம் பற்றியே அவதார ரஹஸ்ய வேதிகளான வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகள் ஸீதையுடன் ஸ்ரீராமனை ரத்நஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளப்பண்ணி அபிஷேகம் செய்தனர். ஜடாயுவுக்கும் அயோத்தியில் வாழும் சராசரங்களுக்கும் திவ்யகதி தாநத்தாலும் ஸமுத்ர ஸேது பந்தநாதிகளாலும் ஸ்ரீ ராமனுடைய ப்ரபாவம் வெளியாவதாகக் கூறத்தாழ்வான் ஸ்ரீ அதிமாநுஷ ஸ்தவத்தில்,

“வ்ருஹூாதி கிஙுந யஊா கிஔ ராவவகெவ ஊயாஜ்ஞமஸ்ய வஶமொ ஊநுஜகவஊளஹ்யாக | ஸீதாவியொரமவிவஶோ ந வ தத்திஜ்ஞ: வ்ராஊா ஹூஊா வாமதிம் ஹி கஶம் வமாய ॥’

‘யெ யஊ்ஊாவஸிதஊஹ்யஸிதம் வ யொமம் வொஊம் வ கிஙுந ந ஜாகவ்யிகாரஹாஜ: | தெஉவி கவஊாவஸிதஹுஊிதஉவாஙு மஙாகஊ வஙாதிமா: வாமதிம் மஊிதாஷூ்யணாஊ்யா: ॥’

‘ஊாநுஷ்யகம் வஸிதஊாவஸிதம் வ்யவ்யக்ஷா ஷெவாயிகம் வஸித ஊஜுகிஊஹ்ய(வ்ய) காஷீஊ: | யக்ஷாமஸெ வத வவஙியு நாயு ஷெஸதம் ஶெஶெஶெ: ஹூவஜூஊஸஜீதஸம்வ்யணஊெஊ: ॥’ ·

இத்யாதி ஸூக்திகளில் அருளிச் செய்திருக்கிறார். ஆகவே ப்ரபாவத்தை அவலம்பித் துச் சொல்லும் ஸமாதாநம் அநுசிதமாகாது.

‘ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தஶரதாத்மஜம்’

என்று ஸ்ரீராமன் அருளிச்செய்த மநுஷ்யபாவத்தை அநுஸரித்து ஸமாதாநமாவது— அயோத்யா காண்டம் 4-வது ஸர்கத்தில், ஸ்ரீராமனுக்கு யௌவராஜ்ய பட்டாபி ஷேகம் செய்ய உத்தேசித்த தசரத சக்ரவர்த்தி ஸ்ரீராமனைப் பார்த்து, ‘இந்த ராத்ரியில் ஸீதையுடன் தர்ப்பத்தில் சயநித்து உபவாஸமிருக்கவேணும்’ என்று சொன்னதா யிருக்கிறபடியாலும், அதே ஸர்க்கத்தில் மேலே ஸ்ரீராமன் கௌஸல்யையைப் பார்த்து ‘என் தகப்பனர் ரித்விக் உபாத்யாயர்களுடன் இந்த ராத்ரியில் என்னேடுகூட ஸீதையும் உபவாஸ மிருக்கவேணுமென்று சொன்னர்’ என்று சொன்னதா யிருப்ப தாலும், 5-வது ஸர்க்கத்தில் தசரதர் வஸிஷ்டரைப் பார்த்து, ‘ஸீதையுடன் ஸ்ரீராம னுக்கு உபவாஸ ஸங்கல்பம் செய்விக்கவேணு’ மென்று சொன்னதாக ப்ரதிபாதிக் கப்பட்டிருப்பதாலும், அதே ஸர்க்கத்தில் வஸிஷ்டர் ஸ்ரீராமனைப் பார்த்து ‘ஸீதை யுடன் நீ இப்பொழுது உபவாஸமிருக்க வேணுமென்று சொல்லி ஸீதா ஸமேதனை ஸ்ரீராமனுக்கு மந்த்ரவத்தாக உபவாஸத்தைச் செய்து வைத்தார்’ என்றிருப்பதாலும், 6-வது ஸர்க்கத்தில் வஸிஷ்டர் சென்றவுடன் த்ரிகரண சுத்தியுள்ள ஸ்ரீராமன் அப்படிப்பட்ட ஸீதையுடன் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதிக்குச் சென்று அந்த ஸ்ரீரங்கநாதனை உத்தேசித்து அக்நியில் ஆஜ்யஹோமம் செய்து ஹவிஸ் சேஷத்தை ப்ராசநம் செய்து அதைத் தனக்கு ப்ரியமாக அநுஸந்தித்து ஸ்ரீரங்கநாதனை த்யாநம் செய்துகொண்டு தர்ப்பமயமான படுக்கையில் சயநித்துக் கொண்டாரென் றிருக்கை யாலும், அதே ஸர்க்கத்தில் கொஞ்சம் மேலே ‘அயோத்தியில் இருக்கும் எல்லா ஜனங்களும் ஸ்ரீராகவன் ஸீதையுடன் உபவாஸ மிருப்பதாகக் கேட்டு ஸந்தோஷித்தது’ என்று சொல்லியிருப்பதாலும், பட்டாபிஷேகார்த்த வ்ரதம் இருவருக்கு மிருந்ததாகத் தெரிய வருகிறது. ஆகையால் தசரத சக்ரவர்த்தியின் அபிப்ராயத்தை அநுஸரித்து ஸீதையுடன் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள். மேலும் 37-வது ஸர்க் கத்தில் வஸிஷ்டர் கைகேயியைப் பார்த்துக் கோபத்துடன், ‘ஸீதாதேவி வநம் செல்ல

வேண்டியதில்லை; ஸ்ரீராமனுடைய பத்நியான இந்த ஸீதை ஸ்ரீராமனுடைய ஆத்மாவானதால், ஸ்ரீராமன் இருக்கவேண்டிய ஸிம்ஹாஸநத்திலிருந்து பூமியை ரக்ஷிக்கப்போகிருள்' என்று சொல்லியிருப்பதாலும், யுத்த காண்டம் 48-வது ஸர்க்கத்தில் புஷ்பக விமாநத்திலிருக்கும் ஸீதை நாகாஸ்த்ரத்தால் கட்டப்பட்ட ஸ்ரீராம லக்ஷ்மணர்களைப் பார்த்து ம்ருதர்களாக நினைத்து

'𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑍍𑌯𑍈𑌃 𑌕𑌿𑌲 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌅𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌽𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌃 𑌪𑌤𑌿𑌭𑌿𑌃 𑌸𑌹 ॥
𑌅𑌧𑌿𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌽𑌭𑌿𑌷𑍇𑌕𑍋 𑌮𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌪𑌤𑌿𑌨𑌾 𑌸𑌹 ।
𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌕𑍁𑌶𑌲𑍈𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌤𑌥𑍀𑌕𑍃𑌤𑌮𑍍 ॥'

[பாதங்களில் ரேகா ரூபங்களான எந்த தாமரஸ புஷ்பங்களோடு கூடின ஸ்த்ரீகள் நர ஶ்ரேஷ்டர்களான பதிகளுடன் பட்டாபிஷேகம் செய்யப்படுகின்ருர்களோ, அந்த ரேகா ரூபங்களான தாமரைப் புஷ்பங்கள் என்னுடைய பாதங்களி லிருக்கின்றன. ஜ்யௌதிஷிக ஸித்தாந்தத்தில் நிபுணர்களான ப்ராம்ஹணர்களால் எனக்குப் பதியுடன் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்று சொல்லப்பட்டது. அதெல்லாம் வீணுகச் செய்யப்பட்டது] என்று புலம்பி யிருப்பதாலும், ஸீதைக்கும் பட்டாபிஷேகம் செய்யவேண்டியது மிகவும் அவஶ்யமென்று ஏற்படுகிறது. ஸீதைக்குப் பாதங்களி லிருக்கும் பட்டாபிஷேக லக்ஷணங்களைத் தசரத சக்ரவர்த்தி அறிந்து, பட்டாபிஷேகத்துக்காக ஸீதையுடன் ஸ்ரீராமன் உபவாஸ மிருக்கவேணு மென்று நினைத்து, ஸ்ரீராமனிடமும் வஸிஷ்டரிடமும் அவ்விதம் சொல்லி யிருக்கலாம். மநுஷ்ய பாவனையிலும் ஸீதையுடன் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டியது அவஶ்யமென்று முன்சொன்ன காரணங்களால் ஏற்படுவதால், மற்ற பட்டாபிஷேகங்களோடு ஸ்ரீராம பட்டாபிஷேகத்தை ஸமமாக நினைத்து ஆக்ஷேபம் செய்வது ஸரியன்று. இந்த இரண்டு வித ஸமாதாநமும் ஸமஞ்ஜஸமென்று, பூமிதேவீ ஸமேத ஸ்ரீநிவாஸ பதபங்கஜ ஸேவராஸிக்யம், சமாதி குணஸம்பத்தி, க்யாதி லாப பூஜையில் அபேக்ஷையின்மை, மஹா வைதுஷ்யம் முதலிய நற்குணங்கள் நிறைந்த ஸ்ரீ. உப. நவநீதம் ஸ்வாமியும் அருளியாயிற்று.

ஸ்ரீ:

மதிப்புரை

ஸ்வாபதேஶார்த்த ஸாகரம்: இப்பெயர் பூண்ட ஒரு க்ரந்தம் வரப்பெற்றோம். இது ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் வித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் இயற்றப்பெற்றது. இதில் ஆழ்வார் அருளிச்செயல்களின் ஸ்வாபதேஶார்த்தம் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஒரு வித்வத் ரத்நம்; ஜகத் ப்ரஸித்தர். அவர் இயற்றியுள்ள க்ருதிகள் ஸகல ப்ரகாரங்களிலும் ஶ்லாக்யங்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! அவரால் விவரிக்கப்பட்டுள்ள ரஸவத்தான அர்த்தங்களைப் படித்து நாம் மிக்க ஆநந்தத்தை அடைந்தோம். இதன் விலை அணு 8. "மதராஸ் மயிலாப்பூர் பண்டித ஸ்ரீ. உப. ஏ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்" என்பவரிடம் இந்த க்ரந்தம் கிடைக்கும்.

210115

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் மங்களாஶாஸநங்கள்

வஸ்த்ராபீஷ்டார்த்தவாடீ வஸ்த்ரம்
வஸ்த்ராஸநாம்புஷ்பித நிந்த்ராஹி ।
ஶயாநோக்யர்த்த்வ ஹஸ்தம் மதல்பம்
கிம் மே மஹஸ்ஸாந்த்ரஸ்தம் நமோ தாஸ்ஸி ॥

ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஶ்ரீமத்வேதமௌளீத்யாதி பிருதாலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர், சுமார் 4-5 மாதங்களுக்கு முன் எவ்வுள் பெருமலையின் மங்களாசாஸநத்திற்கு விஜயம் செய்தருளியது அனைவரும் அறிந்ததே. இங்கிருந்து கடைசியாப் பக்தகோடிகளை அநுக்ரஹித்து, மதுரமங்கலம் வழியாக ஸ்ரீகாஞ்சீக்ஷேத்ரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு 'திருவத்தியூரான்' எனும் ஸ்ரீ வரதராஜனை மங்களாசாஸநம் செய்துகொண்டு, பிறகு திருப்பாற்கடல் எனும் சிறிய க்ராமத்தில் பல நாட்கள் எழுந்தருளியிருந்து, அங்கு நின்றும் 'வண்பூங் கடிகை' என்கிற கடிகாசலபதியின் ஸகல மர்யாதைகளையும் பெற்று, திருமலை என்றும், திருப்பதி என்றும் கூறப்படும் மஹா ப்ரஸித்திபெற்ற திவ்யக்ஷேத்ரத்தில் திருச்சானூர் என்கிற நாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளி அலர்மேல் மங்கையின் மங்களாசாஸநம் செய்து, கீழ்த் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜன் மர்யாதையுடன் வீதி வலம் வந்து ஸ்ரீமடத்தில் எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து ஶ்ரீவேங்கட க்ஷேத்ரத்தை (ஏழுமலையை) அடைந்து, பக்தர்கள் புடைசூழ ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் அலர்மேல்மங்கை யுறை மார்பனை மங்களாசாஸந மிட்டு ஸகல விதமான தீர்த்தாதி மர்யாதைகளையும், பெரியதொரு அத்திருமேனியின் ஸம்பந்தம் வாய்ந்த பட்டாடையையும் பஹுமானமாய் அடைந்து, ஆங்குள்ள மடத்திற்கு வாத்ய கோஷாதிகளுடன் எழுந்தருளியாயிற்று.

பிறகு திருவெவ்வுளூர் எனும் இம்மஹாரண்யத்திற்குத் திருப்பதியில் நின்றும் நேராக ஆனி 10௳ (24—6—43) வியாழக்கிழமை எழுந்தருளினர்.

ஸர்வ ஜீவோத்தாரகமான இம்மஹா விஜயத்தைக் கொண்டாட பக்தர் எல்லோரும் ஒருங்கு கூடி இன்று (24-6—43) காலை ஸ்ரீவஸுமதீ ஸஹித ஸ்ரீவீரராகவனின் மாலை பரியட்டம் ஸ்ரீ சடகோபன் பல்புள்ளி துப்பட்டி முதலியவைகளை ரஜதமயோஜ்வலமான பெரியதண்டிகையில் எழுந்தருளிப்பண்ணிக்கொண்டு வாத்யங்கள் முழங்க வீதிவலமாய் ஒரு மைலுக் கப்பாலுள்ள பெருமாள் மண்டபத்தை அடைந்து, ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளிப்பாடு இட்டு, திருப்பரியட்டம் சால்வை பல்புள்ளி துப்பட்டி சாதரா இரட்டைமாலை ஸ்ரீராகவாபயஹஸ்த சந்தநம் முதலிய வரிசைகளை வழங்க ஸ்ரீ அழகியசிங்கரும் "தந்யோஸ்மி" எனத் திருவுள்ளம் பற்றிப் பாகவதர்களின் ஸ்வஸ்திவாசநிக புரஸ்ஸரமாய் யதாவத்

ஸகல மர்யாதைகளுடன் தீர்த்தம் ஸ்ரீ சடகோபன் மாலை துப்பட்டி சால்வை முதலியவைகளை ஸ்வீகரித்து, ப்ராகாரத்திலுள்ள ஸ்ரீ கநகவல்லி ஸந்நிதியிலும் அவ்விதமே மர்யாதைகளை அடைந்து, பரிபூர்ணாநந்த ஹ்ருதயராய் மடத்துக்கு எழுந்தருளினார். இப்பெருங் ஜனத் திரளின் முன் ஷை தேவஸ்தாந ஏஜண்ட் மாமண்டூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை ஸ்ரீ அழகியசிங்கர் பரிபூர்ண கடாக்ஷத்தின்மூலம் ஸ்ரீ[illegible] ஸ்ரீ வீரராகவன் வரம் தந்து கடாக்ஷிக்க வேணுமாய் ப்ரார்த்தனை. நிற்க: நம் ஸ்ரீ ஏஜண்ட் ஸ்வாமி பெருமாள் திருப்பணியார ப்ரஸாதங்களை சத்ர சாமர வாத்ய கோஷங்களுடன் ஸபஹுமாநமாய் வீதிவலம் கொண்டுவந்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் கொண்டு ஸமர்ப்பித்ததை உகந்தாயிற்று.

இப்பெரும் விஜயத்தைக் கண்டு ஆநந்தித்த பக்த கோடிகளை ஸ்ரீ வீரராகவன் பூர்ணமாய்க் கடாக்ஷிப்பன் என்று நம்புகிறோம்.

ப. ச. தேசிகதாஸன் : சிரோமணி.

---

(2)

ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி

श्रीसौम्यमूर्तिस्सुगृहीतनामा
निधिः कलानाममृतोक्तिवर्षी ।
वामस्य दैवस्य वशाद्गतोऽस्तं
सर्वे वयं शोकतमिस्रमग्नाः ॥ ॥ १ ॥

कठोरकर्मैकरताः किलैके
विद्याविनोदैकरसास्तथान्ये ।
कृष्णोऽर्पितान्तःकरणाश्च केचित्
तद्गर्भभूतेषु दयालवोऽन्ये ॥ २ ॥

विशिष्य तेभ्यो विरराज सौम्यो
ललामभूतो भुवि वैष्णवेषु ।
परेण पुंसा स्वपदं च नीतो
न शोचनीयो वयमेव शोच्याः ॥ ३ ॥

इति नवसालवासी

वाधूल र. श्रीनिवासाचार्यः

(3)

[இவை, சென்ற ஏப்ரில் மாஸத்தில் அயோத்யையில் நடைபெற்ற வர்ணாஶ்ரம ஸங்கத்தில் செய்யப்பட்ட நிர்ணயங்கள். இவைகள், ஸம்பாதகரின் குறிப்புக் களில் விமர்ஶம் செய்யப்பட்டிருக்கின்றன.]

A. This fourteenth Conference of the All-India Varnashram Swarajya Sangh (held at Ayodhya) vehemently opposes "The Hindu Code, Part I, Intestate Succession Bill" framed by the Rau Committee and now pending in the Central Legislature. The said Bill has been submitted to the Central Legislature as the first step taken towards overhauling of the Hindu Law from the point of view of the Hindu Dharma Shastras; this Conference finds that succession being indivisibly connected with the religious duties of obsequial offerings, *Pindodaka-Kriyas* etc., the question of succession is a religious one and that neither the Ruling Power nor the legislature has any authority to effect therein any change repugnant to the Dharma-Shastras.

This Conference is surprised and grieved to find that in spite of the most inconsiderate provisions of the Bill, which run directly counter to the Dharma-Shastras e. g.

(1) Simultaneous heirship of the widow and daughter along with the sons;

(2) Right of absolute ownership to females, similar to that of males;

(3) Attaching the incidents of Streedhan (females' special property) to property however acquired by females;

(4) Equality of shares of the sons, joint or separate, after their father's death;

(5) The continuity of the paternal 'gotra' of a female even after her marriage;

(6) Devolution of paternal property divided into shares and as joint property with the right of survivorship;

(7) Judicial proof of adultery in proceedings to which she or her husband were parties, as the only reason for dis-inheriting a married female;

(8) Encouragement of inter-marriages between different 'Varnas' and;

(9) The determination of the Child, in accordance with the Varna of the surviving parent, etc.;

The protagonists of the Bill have dared to re-iterate that the said Bill is innocuous and in consonance with the principles of the Dharma-Shastras; and that this over-boldness on their part is due either to their ignorance of the principles of the Hindu Law or to a desire to represent them otherwise than as they are; this conference is of the considered opinion that the passing of the Bill into Law will result in fearful trans-

gressions of and confusion in the time-honoured Shastraic injunctions and that from the economic point of view also, Hindu society shall be disrupted and reduced to poverty.

This Conference, therefore, deems it necessary that all Hindus of India and all such institutions that are working for the betterment of the Hindu society should take vigorous steps to stop for ever introduction of such subversive measures in the Legislatures.

This Conference urges on the Government to see that they are mistaken if they be under the impression that the suggestions made by the said Committee are in harmoney with the principles of the Dharma-Shastra.

The Conference, therefore, wants to send three experts to the Government to show that the provisions of the Bill are factually repugnant to the Dharma-Shastras; that the Government and the members of the committee do take into careful consideration the opinions of the said experts and that the Government do assure the disconcerted Sanatani Subjects that, if necessary, opportunity would also be given for discussions on the subject.

B. This Fourteenth Conference of the All-India Varnashram Swarajya Sangh, strongly condemns and opposes the Bill named "The Hindu Code, Part II Marriage, for the following reasons:—

(1) that marriage being a sacrament, none has any authority to effect any change therein in the law relating to the subject;

(2) that the bill raises Civil marriage to the level of sacramental marriage;

(3) that it openly encourages abolition of differences between the existing Varnas by legalizing asavarna-marriages prohibited by Hindu Law.

(4) that there is no necessity of such legislation as there already exists the statute named the Indian Civil Marriage Act III of 1872 for those who desire to marry in a non-sacramental from and urges the Government to throw out the Bill.

C. This Conference of the All-India Varnashram Swarajya Sangh condemns the policy of entrusting to the Hindu Law Committee the work of framing Bills abrogating Hindu Law and inviting the attention of the Government towards the anti-religious and subversive character of the Bills framed by the Committee which stand as samples of the sort of work which it can turn out, urges on the Government to stop further work of the said Committee and to dissolve the same, since nothing other than mutilation of the Hindu Dharma-Shastra (Hindu Law) and rendering it most harmful, can be expected from the said Committee.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கர் மறுபடியும் திருவெவ்வுளூருக்கு எழுந்தருளிவிட்ட ஸமாசாரம் ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். சென்ற வைகாசி மாஸத்தில் திருப்பாற்கடலைவிட்டுப் புறப்பட்டுச் சோளஸிம்ஹபுரம் மார்க்கமாய்த் திருப்பதிக்கு எழுந்தருளி, அங்குத் திருவேங்கடமுடையானை மங்களாஶாஸநம் செய்துவிட்டு, இப்பொழுது திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி யிருக்கிறார். வரப்போகும் ஆடிமீ 1உ (17-7-43) சனிக்கிழமை திநம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை அவ்விடத்திலேயே உபக்ரமிக்கலாமென்று திருவுள்ளம் இருப்பதாகத் தெரிகின்றது. அப்படி உபக்ரமித்தால் உத்தாந கால பர்யந்தம் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கவேண்டு மாகையால், சற்றேறக்குறைய மூன்று மாஸ காலம் திருவெவ்வுளூரிலும் அதற்கு ஸமீபத்திலுமுள்ள ப்ரதேஶங்களிலும் வஸிக்கும் பக்தர்களுக்கு அநவரதம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய ஸேவை ப்ராப்தமாகும்.

பன்னிரண்டு வருஷ காலம் ஒரே ஸ்தாநத்தில் பத சலநமின்றிக்கே ஸ்திரமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இப்பொழுது ஒன்றரை வருஷகாலமாக விஶேஷித்த யாத்ரோத்ஸவத்தைக் கண்டருளுகிறார். இந்த யாத்ரையால், "எப்பொழுது நமது பெருமாளை நாம் ஸேவிக்கப்போகிறோம்?" என்று சாதக பக்ஷி போலக் காத்திருந்த ஆஶ்ரிதர்களின் மநோரதம் பூர்ணமாக நிறைவேறிற்று. அதைக்காட்டிலும் நூறு மடங்கு அதிகமானது, இந்த யாத்ரோத்ஸவத்தால் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஏற்படும் ஆநந்தம். 'எப்பொழுது ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு யாத்ரோத்ஸவத்தைக் கண்டருளச்செய்து அங்கங்கு அளவற்ற ஆர்த்தியுடன் எதிர் பார்த்திருக்கும் ஆஶ்ரிதர்களுக்கு அவனது திவ்ய ஸேவையைச் செய்வித்து, அந்த ஆஶ்ரிதர்களையும் ஸ்ரீஶரண்யனையும் ஸங்

தோஷிப்பிக்கப் போகிறோம்' என்று விடாய்த்திருந்த ஸ்ரீ அழகிய சிங்கருக்கு, தப்தருக்கு விஶாலமான தருச்சாயை போல இந்த ஒன்றரை வருஷ யாத்ரா மஹோத்ஸவம் மஹத்தான நிர்வ்ருதியைக் கொடுத்திருக்கவேண்டு மன்றோ? எப்பொழுதும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய கைங்கர்ய பாரத்தை வஹிப்பதால் ஸ்ரீ அழகியசிங்கர் எவ்வித விஶ்ரமுமின்றிக்கே இருந்து வருகையிலும், அது ஸ்வரூப ப்ராப்தமான ஶரண்யனுடைய கைங்கர்யமானதால், ஹரிகதாம்ருதத்தைப் பாநம் செய்துகொண்டிருந்த பரீக்ஷித்துக்குப் பசி தாஹம் பாதிக்காமல் இருந்ததுபோல, இந்தக் கைங்கர்ய பாரம் கொஞ்சமேனும் ஸ்ரீ அழகியசிங்கரைப் பாதியாமலே இருக்கின்றது. பல்லாண்டு பல்லாண்டாகக் காத்ர தார்ட்யத்துடன் இம்மாதிரி எழுந்தருளியிருந்து, இப்பொழுது இந்த ப்ராந்தங்களில் யாத்ரோத்ஸவத்தைச் செய்வித்தது போல் உத்தர தேஶங்களிலும் யாத்ரோத்ஸவத்தைக் கண்டருளப்பண்ணி, மஹாஜநங்களுக்குப் பகவத் பக்தியைப் பூர்ணமாகப் புகட்டி ஜகத்தை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்று நாம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸதா ப்ரார்த்தித்துக் கொண்டேயிருக்கின்றோம்.

* * * * *

நமது ஸநாதந தர்மங்களுக்கு அபாயம்

இப்பொழுது இந்தத் தேஶத்தின் பெரிய சட்ட ஸபையில், ஹிந்துக்கள் ஸம்பந்தப்பட்ட பர்யந்தம் சில சட்ட மாறுதல்களைச் செய்வதற்காக ஒரு முக்யமான ஆலோசனை நடைபெற்று வருகின்றது. அப்படி ஆலோசிக்கப்படும் மாறுதல்களுள், நமது தாய விபாகத்தைப் பற்றியவை ஒரு வகுப்பும், நமது விவாஹ நியமங்களைப் பற்றியவை மற்றொரு வகுப்புமாக இருக்கின்றன. இந்த மாறுதல்களைச் செய்யவேண்டும் என்று ப்ரயத்நப்படுபவர்களின் முக்ய நோக்கம் என்னவென்றால்—'இப்பொழுது ஸ்த்ரீகளுக்குப் பித்ரார்ஜித ஸ்வத்திலோ, பர்த்தாவால் ஸம்பாதிக்கப்பட்ட ஸ்வத்திலோ, இவை ஒன்றிலும் புருஷர்களுக்கு இருப்பது போன்ற பாத்யம் இராமல் இருப்பதாலும், தாம்பத்யத்தில் ஆநுகூல்யம் இராவிட்டால் தமது ஸௌகர்யப்படி அநுகூலமாயிராமலிருக்கும் பர்த்தாவை த்யஜித்து வேறு விவாஹம் செய்துகொள்ளக்கூடாமல் இருப்பதாலும், விவாஹத்தை மந: ப்ரவ்ருத்தி இருக்குமிடத்தில் செய்துகொள்ளக்கூடாமல் ஸவர்ண மென்றும் பிந்ந கோத்ர மென்றும் சிற்சில கட்டுப்பாடுகள் இருப்பதாலும் தம்பதிகளுக்குப் பரஸ்பரம் நேரும் கஷ்டங்களை நிவர்த்திப்பித்துப் புமாங்கள் அநுபவிப்பது போன்ற ஸர்வ ஸ்வாதந்த்ர்யத்தையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை யாவச்சக்யம் ஸுகிகளாக வாழ்நாட்களை நடத்தச் செய்யவேண்டும் என்பதே.

'लोकास्समस्तास्सुखिनो भवन्तु'

என்கிறபடி, மஹா ஜநங்களுக்கு ஸௌக்யத்தைச் செய்ய ப்ரயத்நப்படுவது மிகவும் ஶ்லாக்யமான ப்ரவ்ருத்தியே. ஆனால், இம்மாதிரியான ப்ரவ்ருத்திகளைச் செய்ய ஆரம்பிக்கும் முன், 'நாம் செய்யும் ப்ரவ்ருத்திகள் நம்மால் இச்சிக்கப்படும் ஸௌக்யத்தைக் கொடுப்பதோடு நின்று விடுமா? நம்மால் எதிர்பார்க்கப் படாமல் இருக்கும் சில பெருத்த தீங்குகளுக்குக் காரணமாகிவிடாதா?' என்பதை நாம் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். தர்மம் மேலிட்டிருந்த காலத்தில் தபோ மஹிமையால் திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றிருந்த மஹர்ஷிகள், நம்முடைய ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்து நமது ப்ரதிதிந நடவடிக்கைகளிலும் தர்மாநுஷ்டாநங்களிலும் சிற்சில வ்யவஸ்தைகளைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நீடூழி காலமாக அந்த வ்யவஸ்தைகள் நமக்கு ஆநுகூல்யத்தையே செய்துகொண்டு வந்திருக்கின்றன. சிற்சில வ்யக்திகளுக்குச் சிற்சில காலங்களில் அவை தாபத்திற்குக் காரணமாகின்றன வென்னும் காரணத்தைக்கொண்டு மாத்ரம், ஜ்ஞாநத்திலும் சக்தியிலும் அதிமாத்ரம் ஸங்கோசத்தை அடைந்திருக்கும் நாம் அவைகளைச் சீர்திருத்த முயன்றால், அந்த முயற்சி நம்முடைய ஜ்ஞாநத்திற்கு எட்டாத பெரிய விபத்துக்களை விளைவிப்பதில் பர்யவஸித்துவிடுமன்றோ! சில மேட்டுக் கழனிகளுக்கு நீர் ஏறிப் பாயவில்லை யென்று ஏரிகரையை உடைத்து விடுவது புத்திமத் க்ருத்யமாகுமா? மஹா ஜநங்களுடைய ஶ்ரேயஸ் என்பது பெரிய விஷயம். த்ரிகால ஜ்ஞாநிகளாக இருப்பவர்களே அதில் கை வைப்பதற்கு அர்ஹர்கள். இடம் வலம் அறியாத நாம் அவர்களாற் செய்யப்பட்டுள்ள வ்யவஸ்தைகளைக் குலைக்க முயல்வது கேவலம் பரிஹாஸத்திற்கு இடமாகும்.

நிற்க: இந்த லோகரீதி எப்படி இருக்கிறதென்றால், ஆரம்பத்தில் துக்கத்தை ஜநிப்பிக்கும் சில அநுபவங்கள் முடிவில் அநுகூலமாகப் பர்யவஸிக்கின்றன; முதலில் ஸுகப்ரதமாக இருக்கும் மற்றும் சில அநுபவங்கள் முடிவில் விபரீதமாக நமக்குத் தீங்கையே விளைவிக்கின்றன. பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது பாலர்களுக்கு மிகவும் கைப்பாகத் தோன்றுவது போல, நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியமங்கள் பாலதுல்யர்களாக இருக்கும் நமக்கு அப்ரியங்களாகவே தோன்றும். அந்த அப்ரியத்தை நிவர்த்திப்பதற்காக நாம் அந்த நியமங்களைக் கடந்து நடந்தால், அவிதேயர்களாக ஸ்வச்சந்த ஸஞ்சாரம் செய்யும் பாலர்களுக்கு எந்தக் கதி ஸம்பவிக்குமோ அந்தக் கதியே நமக்கும் ஸம்பவிக்குமன்றோ? ஆகையால், ஸுகதுக்கங்களின் உண்மையை அறிய ஶக்தியற்றிருக்கும் நாம் அவைகளின் உண்மையை நன்கு அறிந்த நமது பெரியோர்களால் காண்பிக்கப்பட்டுள்ள மார்க்கத்தில் நடப்பதே ஶ்ரேயஸ்கரமாகும்.

நமது ஶாஸ்த்ரங்களெல்லாம் நம்மிடத்தில் அளவற்ற வாத்ஸல்யத்தை யுடைய நமது நாதனுடைய ஆஜ்ஞைகள். அவையெல்லாம் நமக்கு ஐஹிக ஸுகத்தைக் கொடுப்பதுடன் ஆத்ம ஶ்ரேயஸ்ஸையும் செய்யுமாறு வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ஆத்ம ஶ்ரேயஸ் ஸம்பந்தத்தைப் பெற்றுள்ள விஷயங்களில் ப்ரவேஶிப்பதற்கு அரசர்களுக்கோ அவர்களுடைய ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கோ ஒருவித அதிகாரமும் கிடையாது. நமக்கு யாத்ருச்சிகமாகக் கிடைத்துள்ள தேஹ பலத்தை அவலம்பித்து ந்யஸ்த தண்டர்களாயிருக்கும் ஸாதுக்களை அவர்கள் நிர்ப்பந்திக்க முயன்றால் அது பெரியதொரு ஹிம்ஸையேயாகும். அது ஒருகாலும் தைவ ஸம்மதமாகமாட்டாது. இதை நமது ராஜாங்கத்தார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்கள், நமது ஶாஸ்த்ர விதிகளை மௌட்யத்தால் மாற்றுவதற்கு ப்ரயத்நப்படும் அஜ்ஞர்களுக்குக் கொஞ்சமேனும் இடங்கொடுக்கக்கூடாதென்று நாம் அந்த ராஜாங்கத்தாரை மிக்க தார்ட்யத்துடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த மூட க்ருத்யத்தைத் தடுப்பதற்கு வட தேஶத்தில் அநேக ஆஸ்திகர்கள் மஹத்தான பரிஶ்ரமத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அயோத்யையில் சென்ற ஏப்ரல் மாஸத்தில் பெரியதொரு ஸங்கம் கூடி, இந்த அஜ்ஞர்கள் செய்யும் ப்ரயத்நத்தைப் பலமாகக் கண்டித்திருப்பதைப் பார்க்க நமக்கு அளவற்ற ஸந்தோஷ முண்டாகின்றது. தக்ஷிண தேஶத்திலும் ஆஸ்திகர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து இந்த ப்ரயத்நத்தை யாவத் ப்ராணம் தடுக்கவேண்டும். இது விஷயத்தில் ஔதாஸீந்யம் கூடாது. ஶாரதா சட்ட விஷயத்தில் நாம் எவ்வித எதிர்ப்பையும் செய்யாமல் உதாஸீநர்களாக இருந்துவிட்ட படியால், நாம் இப்பொழுது அஸஹ்யமான கஷ்டங்களை அநுபவித்து வருகிறோம். இது விஷயத்திலும் நாம் உதாஸீநர்களாக இருந்து விட்டால், அம்மாதிரி கஷ்டங்களே நூறு மடங்கு அதிகமாக ஸம்பவிக்கும். நாம் எதிர்த்தால் அவர்களுடைய ப்ரயத்நம் தடைபட்டு நின்றுவிடுமோவென்று கேட்கலாம். நாம் பலமாகத் தடுத்தால் அது நிறைவேற மாட்டாது என்பது நிச்சயம். அப்படி நிறைவேறினாலும் நமது தர்மத்தை நாம் கைவிடாது செய்துவிட்டோம் என்னும் ஆஶ்வாஸம் நமக்கு ஜநிக்குமன்றோ?

*　　*　　*　　*　　*

இவ்வர்ஷத்து உபாகர்ம விஷயமாக ஸ்ரீ அழகியசிங்கர் பின் வருமாறு நியமநம் செய்தருளியிருக்கிறார். இவ்வர்ஷம்

இவ்வர்ஷத்து உபாகர்மம்

ப்ரதம த்விதீயாதி உபாகர்மம் ஸர்வமும் ஆடிமீ 30உ ஞாயிற்றுக்கிழமை திநமே (15—8—'43) அநுஷ்டிக்கப்பட வேண்டும். ஏனென்றால்:— ஆடிமீ 1உ ஆஷாட பூர்ணிமைக்குக் குரு மௌட்யமும், ஶாகாதீஶனான ஶுக்ரன் ஶத்ரு வீடான ஸிம்ஹத்

தில் இருப்பதால் ஶக்திஹீநனா யிருப்பதும் தோஷம். ஆடிமீ 30௳ பூர்ணிமைக்கு க்ரஹண தோஷம். ஆவணிமீ 28௳ பூர்ணிமைக்கு ஶாகாதீஶனான ஶுக்ரனுக்கு ஸம்பவிக்கும் மௌட்யம் தோஷம். ஆகையால்,

"कालत्रयेऽपि दोषश्चेच्छ्रावण्यामेव कारयेत्"

என்கிறபடி ஆடிமீ 30௳ திநமே உபாகர்மத்தை அநுஷ்டிக்க வேண்டும்.

* * * * *

ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபாதிகள்

ஸ்ரீ ஸந்நிதியில் சென்ற வர்ஷத்தில் உபக்ரமிக்கப்பட்ட ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம், நிகழும் ஆனிமீ 13௳ ஞாயிற்றுக்கிழமை திநம் சாத்துமுறை செய்யப்பட்டு முடிவு பெற்றது. ஸஞ்சாரத்தாலும் ஸ்ரீ அழகியசிங்கருடைய திருமேனி அஶக்தியாலும் இவ்வளவு காலம் விளம்பம் ஸம்பவித்துவிட்டது. பெரிய க்ரந்தமான ஸ்ரீ பாஷ்யத்தின் காலக்ஷேபத்தை ஸ்ரீ ஶரண்யன் நிர்விக்நமாகப் பூர்த்தி செய்வித்தான் என்பது ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

* * * * *

ஸ்ரீ காஞ்சியில் வேத பாடசாலை

ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்தை முன்னிட்டு இந்த ஆனிமீ 7௳ ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஒரு வேத பாடஶாலை உபக்ரமிக்கப்பட்டது. ஷை பாடஶாலையில் சில வித்யார்த்திகள் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப் பாடஶாலையில் உபாத்யாயருடைய சம்பளத்திற்காகவும் வித்யார்த்திகளின் ஸஹாயத்திற்காகவும் யதோசிதம் உதவி புரிவதாக ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். வேறு சில ஆஸ்திக ப்ரபுக்களும் தங்கள் தங்கள் ஶக்திக்கு அநுகுணமாக ஸஹாயம் செய்ய முன்வந்திருக்கிறார்கள். வேளியநல்லூர் த்ட்டை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி உபாத்யாயராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்மாதிரி நமது வித்யாபிவ்ருத்தியை உத்தேஶித்து ஸ்ரீ அழகிய சிங்கரால் பல விடங்களில் பல ப்ரகாரமாகச் செய்யப்பட்டுவரும் ப்ரயத்நங்களை ஸ்ரீஶரண்யன் ஶாஶ்வதமாக நடந்துவரும்படி அநுக்ரஹிக்க வேண்டும் என்பதே ஆஸ்திகர்களின் ப்ரார்த்தனை.

हन्ता चेन्मन्यते हन्तुं हतश्चेन्मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥ १९ ॥

கின்றது என்பது சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் '**कदाचित्**' என்னும் ஸ்தாநத்தில் '**विपश्चित्**' என்பது தென்படுகிறபடியால் அந்தப் பதத்தின் ஸ்வாரஸ்யத்தை அநுஸரித்து, 'விபஸ்சித்வத்திற்கு யோக்யமாக இருக்கும் தசையிற்போலப் பத்த தசையிலும் அவன் ஜநந மரண மற்றவன்' என்று நிரூபிக்கப்படுகின்றது. கீதா பாஷ்யத்தில், '**शाश्वतः**' '**पुराणः**' என்னும் பதங்களுக்கு ரஸவத்தான தாத்பர்யம் சொல்லப்பட்டிருக்கின்றது. அது என்னவென்றால்: - 'ஜீவன் ஸ்தூல பரிணாம மற்றவன் என்பது மாத்ரமில்லை; ஸூக்ஷ்மமான அவிஶத பரிணாமமும் அவனிடம் இல்லை' என்பதைக் குறிக்கின்றது 'ஶாஸ்வத' என்னும் பதம். 'அநாதியாக இருக்கையிலும் எப்பொழுதும் புதிது புதிதாகவே தென்படுகின்றது; எப்பொழுதும் அபூர்வ வஸ்து போல அநுபவிக்கத் தகுந்தது இந்த ஜீவ ஸ்வரூபம்' என்பதைக் குறிக்கின்றது 'புராண' என்னும் பதம். '**पुराऽपि नवः पुराणः**' என்பது அதன் வ்யுத்பத்தி.

---

19. ஶரீரம் நஶித்தபோதிலும் ஆத்மா நஶியாது என்பதே இந்த மந்த்ரத்தால் விவரிக்கப்படுகிறது.

[ப - ரை] - **हन्ता** - கொல்லுகிறவன் [தேஹத்தைச் சேதிக்கிற ஒருவன்], **हन्तुं मन्यते चेत्** - 'நான் இவனைக் கொல்லுகிறேன்' என்று எண்ணினனேயானால் [அதாவது: தேஹமே ஆத்மாவென்று ப்ரமித்துத் தேஹத்தைச் சேதிக்கிற ஒருவன் 'நான் ஆத்மாவைக் கொல்லுகிறேன்' என்று எண்ணினனே யானால்], **हतः** - கொல்லப்படுகிறவன் [வெட்டுண்ட தேஹத்தை யுடைய ஒருவன்], **हतं मन्यते चेत्** - 'கொல்லப்பட்டுப் போய்விட்டேன்' என்று தன்னை எண்ணிக்கொண்டானே யானால் [அதாவது: தேஹமே ஆத்மாவென்று ப்ரமித்துத் தேஹம் வெட்டுப்பட்டவுடன் ஆத்மா வெட்டுண்டு கொல்லப்பட்டுப் போய்விட்டது என்று எண்ணினனே யானால்], **तावुभौ** - இந்த இருவரும், **न विजानीतः** - அறியாதவர்களே [அதாவது : ஆத்ம ஸ்வரூபத்தை அறியாதவர்களே]. **अयं न हन्ति** - இவன் கொல்லவில்லை [ஆத்மாவைக் கொல்லவில்லை], **न हन्यते** - [இவன்] கொல்லப்படவு மில்லை [அதாவது : ஆத்ம ஸ்வரூபம் கொல்லப்படவில்லை]. ஏனென்றால், ஆத்ம ஸ்வரூபமானது கொல்லப்படத் தகாத வஸ்துவன்றோ? ஒருவனுக்குக் கொல்லும் ஶக்தி இருக்கலாம்; ஆனால் எது கொல்லப்படக் கூடியதோ அதை அவன் கொல்லலாமேயன்றி, கொல்லப்படக் கூடாததை அவன் கொல்ல முடியாதன்றோ? ஜலத்துக்கு நனைக்கும் ஶக்தி உண்டு; அது வஸ்த்ரம் முதலியவைகளை நனைக்கும்; வாயுவையும் அது நனைக்குமோ? அதுபோலவே இவ்விடத்திலும்.

உத்பத்தி நாஶம் இவைகளின் தத்வம் பின்வருமாறு நிற்கும். ஒரு வஸ்து ஓர் அவஸ்தையை இழந்து மற்றோர் அவஸ்தையை அடைந்தால், பழைய அவஸ்தையுடன் கூடியிருந்த வஸ்து நஶித்துவிட்ட தென்றும், புதிய அவஸ்தையுடன் கூடிய வஸ்து உத்பத்தி யடைந்து விட்டதென்றும் நாம் வ்யவஹரிக்கிறோம். குடம் உடைந்தால் 'குடம் நஶித்துவிட்டது, கபாலம் உற்பத்தியடைந்திருக்கிறது' என்று நாம் பேசுகின்றோம். உண்மையோ இவ்விடத்தில் அவஸ்தை மாறுதலே. குடமாயிருக்கும் அவஸ்தை கபாலமாயிருக்கும் அவஸ்தையாக மாறி விட்டது என்பதுதான். அவஸ்தை மாறுதல் என்பது, அசேதந வஸ்து சேதநனுக இருக்கும் ஜீவன் ஈஶ்வரன் ஆக மூவருக்கும் உண்டு. ஆனல், அசேதந வஸ்துவுக்கு ஸ்வரூபமே மாறும்; ஜீவனுக்கு ஸ்வரூபம் மாற மாட்டாது; ஜ்ஞாநம் சுருங்குகிறது மலருகிறது இவைபோன்ற ஸ்வபாவ மாறுதல் அவனுக்கு உண்டு; ஈஶ்வரனுக்கோ வென்றால், ஸ்வரூப மாறுதலு மில்லை ஸ்வபாவ மாறுதலு மில்லை; ஆனல், ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்ம சேதநாசேதநங்களின் வைஶிஷ்ட்யமும் ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தூல சேதநாசேதந வைஶிஷ்ட்யமும் இருக்கிற படியால், ஶரீரத்வாரா அவனுக்கும் ஒருவித மாறுதல் ஸம்பவிக்கிறது. இந்த மாறுதல்களில் எவைகளுக்கு ஸ்வரூப மாறுதல் இல்லையோ அவை களை நித்ய வஸ்துக்களென்றும் மற்றவைகளை அநித்யங்களென்றும் நாம் வ்யவஹரிக்கின்றோம். ஆகையால், அசேதநங்களெல்லாம் அநித்யங்கள்; சேதநர்க ளெல்லாரும் நித்யர்கள். ஜீவனுக்குள்ள நித்யத்வத்திற்கும் ஈஶ்வரனுக்குள்ள நித்யத்வத்திற்கும் வாசி உண்டு. அது என்னவென் றால் :—ஜீவனுக்குக் கேவலம் ஸ்வரூப மாறுத லில்லாமை; ஈஶ்வரனுக்கு ஸ்வபாவ மாறுதல் ஸ்வரூப மாறுதல் இரண்டு மில்லாமை. இதை உத் தேஶித்தே, ஶ்ருதி ஈஶ்வரனை நித்யர்களுக்கெல்லாம் நித்யன் என்று சொல்லுகிறது. 'नित्यो नित्यानाम्'

இந்த இரண்டு மந்த்ரங்களும் ஒரே விஷயத்தைப்பற்றியவை. ஏனென்றால், இரண்டாவது மந்த்ரம் முதல் மந்த்ரத்தில் சொல்லப் பட்டுள்ள 'न हन्यते हन्यमाने शरीरे' என்னும் வாக்யத்தின் விவ ரணம். 'ஒரே விஷயத்தைப்பற்றியது என்பது யுக்தமே; ஆனல் அந்த விஷயம் ஜீவாத்மாவா? இல்லாவிட்டால் பரமாத்மாவா? என்பதில் மாத்ரம் ஸந்தேஹம்' என்று ஸம்ஶயித்தால், 'அந்த விஷயம் ஜீவாத் மாவே' என்று ஸமாதாநம் சொல்லவேண்டும். இரண்டாவது மந்த்ரம் ஜீவனைப்பற்றியதே என்பது ஸித்தம்; ஏனென்றால், 'கொல்லுகிறன் கொல்லப்படுகிறன்' என்னும் ஶங்கை பரமாத்மாவைப் பற்றி எழாதாகை யால். லோகத்தில் 'நான் இவனைக் கொல்லுகிறேன், இவன் என்னைக் கொல்லுகிறன்' என்னும் எண்ணம் தேஹத்துடன் கூடிய ஜீவன்களைப் பற்றி ஏற்படுகிறதே யன்றிப் பரமாத்மாவைப்பற்றி அம்மாதிரி எண்ணம் ஜநிக்கிறதில்லை. இவ்வாறு இந்த மந்த்ரம் ஜீவாத்மாவைப்

अणोरणीयान्महतो महीयानात्माऽस्य जन्तोर्निहितो गुहायाम् ।
तमक्रतुः पश्यति वीतशोको धातुः प्रसादान्महिमानमात्मनः ॥ २० ॥

பற்றியே பேசுகிறது என்பது ஸித்தமாகிவிட்டால், இந்த மந்த்ரமும் இதற்கு முன்னிருக்கும் மந்த்ரமும் ஒரே விஷயத்தைப் பற்றியவையாகை யால், முன் மந்த்ரமும் ஜீவனைப்பற்றியதே என்பது ஸித்தம்.

---

20. இவ்வாறு இரண்டு மந்த்ரங்களால் ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஶோதிக்கப்பட்டது. ஸாமாந்யமாக ஜநங்கள் தேஹமே ஆத்மாவென்று ப்ரமித்திருக்கிறபடியால், 'இந்தத் தேஹம் ஆத்மாவன்று; இந்த ஶரீரத்துக்குள் அந்த ஜீவன் இருந்தபோதிலும் இந்த ஶரீரம் நாஶம் அடையும் காலத்தில் அந்த ஜீவன் நாஶமடைகிறான் என்பது இல்லை; அவன் ஜநந மரண ஶூந்யன்; அவனுக்கு உத்பத்தியில்லை; நாஶமு மில்லை; அவன் நித்யன்; ஆகையால் தேஹத்தைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணன்' என்று விளக்கி அந்த ப்ரமத்தைப் போக்கி விட்டுப் பிறகு, 'அப்படி நித்யனாக இருக்கும் ஜீவன் ஒருகால் ஸர்வ ஸ்வதந்த்ரனாக இருக்கிறானோ? அவனுக்கு ஶேஷி ஒருவனும் இல்லையோ?' என்று உதிக்கும் ஶங்கைக்குப் பரிஹாரமாக, 'அவனுக்கும் அந்தராத்மாவாக ஒருவன் இருக்கிறான்; அவனுக்கு இந்த ஜீவன் ஶேஷன்' என்று சொல்லுகிறது இந்த மந்த்ரம். அப்படித் தன்னைக் காட்டிலும் வேறுபட்டும் தனக்கு ஶேஷியாகவும் ஒரு பரமாத்மா இருக்கிறான் என்பதை உணர்ந்து, அவனுடைய ஸர்வ நியந்த்ருத்வ ரூபமான மஹிமையை எப்பொழுது இவன் பார்க்கிறானோ, அப்பொழுது இந்த ஜீவன் அந்தப் பரமாத்மாவின் க்ருபையால் ஶோகமற்றவனாக ஆகிறான் என்றும் இந்த மந்த்ரத்தில் சொல்லப்படுகின்றது. ஆகையால் இந்த மந்த்ரம் பரமாத்மாவைப் ப்ரதிபாதிக்கின்றதென்று அறியவேண்டும்.

[ப-ரை.] **अणोः** - அதி ஸூக்ஷ்மமா யிருக்கிற [வஸ்துவைக் காட்டிலும்], **अणीयान्** - மிக ஸூக்ஷ்மனாகவும், **महतः** மிகப் பெரியதா யிருக்கும் [வஸ்துவைக் காட்டிலும்], **महीयान्** - இன்னும் மிகப் பெரியவனாகவு மிருக்கும் [மற்றொருவன்], **अस्य जन्तोः** - இந்தச் சேதநனுடைய, **आत्मा** - [உள்ளில் புகுந்து நியமிக்கும் ஸாமர்த்யமுள்ள] ஆத்மாவாக, [**अस्य जन्तोः** - இந்தச் சேதநனுடைய], **गुहायाम्** - [ஹ்ருதய] குஹையில், **निहितः** - இருக்கிறான். **अक्रतुः** - [காம்யங்களான] கர்மங்களைச் செய்யாதவனா யிருந்துகொண்டு [ஒருவன்], [**यदा** - எப்பொழுது], **तम्** - அவனை, **आत्मनो महिमानम्** - தன்னுடைய ஸகலவித பெருமைக்கும் காரணமாக, **पश्यति** பார்க்கிறானோ, [**तदा** - அப்பொழுது], **धातुः** - [ஸகலத்திற்கும்] தாரகனாயிருக்கும் [அந்தப் பரமாத்மாவின்], **प्रसादात्** - க்ருபையால், **वीतशोकः** - ஶோகமற்றவனாக, [**भवति** - ஆகிறான்].

अणुः - ஸூக்ஷ்மமா யிருக்கும். அதாவது: உள்ளில் புகுந்து நிற்கக்கூடிய ஸாமர்த்யமுள்ள. இவ்விடத்தில் இந்தப் பதத்தால் ஜீவாத்மா குறிக்கப்படுகிறுன். அசேதநமாக இருக்கும் தேஹத்தினுள் ஜீவாத்மா புகுந்து நிற்கிறபடியால், அந்த ஆத்மாவைத் தேஹத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமென்று வ்யவஹரிக்கிறேம். அந்த ஆத்மாவுக்குள்ளும் புகுந்து நிற்கும் மற்றெருவன் உண்டு. அவன் அந்த ஆத்மாவைக் காட்டிலும் ஸூக்ஷ்மன் என்று சொல்லப்படுகிறுன். அவன்தான் பரமாத்மா.

महतो महीयान् - 'மஹத்' என்பதற்குப் 'பெரியது' என்பது பொருள். அதாவது: வ்யாபித்து நிற்கும். ஆகாஶம் விஸ்தாரமாக வ்யாபித்து நிற்கிறபடியால், அதை 'மஹத்' என்று சொல்லக்கூடும். ஆனல் அந்த ஆகாஶத்தாலும் வ்யாபிக்கப்படாமல் இருக்கும் ப்ரதேஶமுண்டு; அம்மாதிரி ப்ரதேஶத்திலும் வ்யாபித்து நிற்கக்கூடிய ஒரு வஸ்து இருந்தால், அதை ஆகாஶத்தைக் காட்டிலும் மிகப் பெரியது என்று சொல்லக்கூடுமன்றே? பரமாத்மாவால் வ்யாபிக்கப்படாமலுள்ள ப்ரதேஶ மொன்றுமில்லை யாதலால், அவனை மிகப் பெரியவனென்று சொல்லுகிறேம். '**स्वाव्याप्तवस्तुरहितः**' [தன்னல் வ்யாபிக்கப் படாத வஸ்துவற்றவன்].

अस्य जन्तोः - கீழில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஜந்துவினுடைய. 'ஜந்து' என்னும் ஶப்தத்திற்குச் 'சேதநன்' என்னும் பொருளும் உண்டு. ஆகையால், இவ்விடத்தில் அந்தப் பதம் 'சேதநனயிருக்கும் ஜீவாத்மாவைக் குறிக்கின்றது' என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த '**अस्य जन्तोः**' என்பது '**आत्मा**' என்னும் பதத்துடன் சேர்க்கப்படுகின்றது. **अस्य जन्तोः आत्मा** - இந்தச் சேதநனுகிற ஜீவாத்மாவுக்கு ஆத்மாவாக. பிந்தி '**गुहायाम्**' [குஹையில்] என்னும் பதம் வருகின்றது. 'யாருடைய குஹையில்?' என்று ஆகாங்க்ஷை பிறக்குமாதலால், அதற்கும் '**अस्य जन्तोः गुहायाम्**' என்று அந்வயம் செய்து கொள்ளப்படுகின்றது. '**अस्य जन्तोः**' என்பது இரண்டுக்கும் நடுவில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறபடியால், அதை இரண்டிலும் அந்வயம் செய்யக்கூடும்.

आत्मा - ஒரு வஸ்துவின் உள்ளில் புகுந்தும் அதை நியமித்துக் கொண்டும் எது இருக்கிறதோ, அது அந்த வஸ்துவுக்கு ஆத்மாவாகும். [**अन्तः प्रविश्य नियन्ता**] தேஹத்திற்குள் ஜீவன் புகுந்திருக்கிறுன்; தேஹத்தை நியமித்துக்கொண்டும் இருக்கிறுன். ஆகையால் அந்தத் தேஹத்திற்கு அவன் ஆத்மா. அம்மாதிரியே பரமாத்மா ஜீவனுக்குள் புகுந்து நிற்கிறுன்; அந்த ஜீவனை நியமித்துக்கொண்டும் இருக்கிறுன். ஆகையால் அவன் அந்த ஜீவனுக்கும் ஆத்மாவாகிறுன்.

अक्रतुः - 'க்ரது' என்பது கர்மங்களைப் பொதுவாகக் குறிக்கும். இவ்விடத்தில் பலாபிஸந்தியுடன் செய்யப்படும் கர்மங்களை அது குறிக்கின்றது. ஆகையால் 'காம்ய கர்மங்களைச் செய்யாதவன்' என்று வ்யாக்யாதிக்கப்பட் டிருக்கின்றது.

आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः ।
कस्तं मदामदं देवं मदन्यो ज्ञातुमर्हति ॥ २१ ॥

குறிப்பு—(1) இந்த மந்த்ரத்தின் இரண்டாவது பாதியில் சிலபதங்கள் அத்யாஹரிக்கப்படுகின்றன. 'यदा पश्यति तदा वीतशोको भवति' [எப்பொழுது பார்க்கிருனே அப்பொழுது சோகமற்றவனுகிருன்] என்று 'यदा तदा' பதங்கள் அத்யாஹரிக்கப்படுகின்றன. (2) 'எதைப் பார்க்கிருன்?' என்னும் கேள்விக்கு, 'तम् आत्मनो महिमानं पश्यति' [அந்தப் பரமாத்மாவைத் தனது மஹிமையெல்லாவற்றுக்கும் காரணமாகப் பார்க்கிருனே] என்பது ஸமாதாநம். 'மஹிமை' என்னும் பதத்திற்கு 'மஹிமைக்கு ஹேதுவான' என்று தாத்பர்யம் சொல்லப்படுகின்றது. ஜீவனுக்கு முக்தி காலத்தில் ஆவிர்ப்பவிக்கும் ஸர்வஜ்ஞத்வம் முதலான பெருமைகள் எல்லாவற்றுக்கும் பரமாத்மாவே காரணமானதால், இம்மாதிரி இவ்விடத்தில் பேசப்பட்டிருக்கின்றது. ['महिमानम्-महत्त्वसंपादकं, स्वसार्वज्ञ्यादिगुणाविर्भाव हेतुभूतम् परमात्मानम्' என்பது பாஷ்யம்.]

धातुः प्रसादात् - धारकस्य परमात्मनः प्रसादात् [தாரகனுயிருக்கும் பரமாத்மாவின் அநுக்ரஹத்தால்]. இது 'वीतशोको भवति' என்பதுடன் அந்வயிக்கப்பட்டிருக்கின்றது. இதை 'पश्यति' என்பதுடனும் அந்வயிக்கலாம். பரமாத்ம தத்வம் அத்யந்தம் அலௌகிகமானதால், பரமாத்மாவின் அநுக்ரஹமிராவிட்டால் அது தென்படமாட்டாதன்றே? இது அடுத்த மந்த்ரத்தில் விளக்கப்படுகின்றது.

'अक्रतुं' என்று ஒரு பாடமும் உண்டு. அப்பொழுது அது 'तम्' என்பதற்கு விசேஷணமாகும். கர்மங்களால் ஏற்றமும் குறைவும் பரமாத்மாவுக்கு ஸம்பவியாததலால், அவன் 'அக்ரது' என்று சொல்லப்படக்கூடும். 'महिमानमात्मनः' என்பதற்குப் பதிலாக 'महिमानमीशम्' என்றும் ஒரு பாடமுண்டு.

இந்த மந்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தை வேறொரு ஸந்தர்ப்பத்தில் பின்வருமாறு ஸ்ரீ பாஷ்யம் விளக்குகின்றது. "अथं यदा स्वस्मादन्यं सर्वस्येशं प्रीयमाणमस्येश्वरस्य महिमानं च निखिलजगन्नियमनरूपं पश्यति, तदा वीतशोको भवति" [இந்த ஜீவன் தன்னைக் காட்டிலும் அந்யனுக இருக்கும் பரமாத்மாவை நம்முடைய உபாஸநாதிகளால் ப்ரீதி செய்யப்படுகிறவனென்றும், அந்தப் பரமாத்மாவின் மஹிமை ஸகல ஜகத்தையும் நியமிக்கும் ரூபத்துடன் கூடினதென்றும் எப்பொழுது பார்க்கிருனே, அப்பொழுது அவன் சோகமற்றவனுகிருன்] இதில், 'महिमानम्' என்பது 'परमात्मनो महिमानम्' என்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. 'महिमानम्' என்பதற்கு 'जीवात्मनः महत्त्वहेतुभूतम्' என்று அர்த்தம் செய்யப்படவில்லை. 'आत्मनः' என்னும் பதம் அவ்விடத்தில் இருந்தால் க்லேசம் ஸம்பவித்திருக்கும்.

---

21. கீழ் மந்த்ரத்தில் பரமாத்மாவின் அநுக்ரஹம் இராமற்

अशरीरं शरीरेष्वनवस्थेष्ववस्थितम् ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥ २२ ॥

போனால், அவனைப் பார்ப்பது அஸாத்யமென்று சொல்லப்பட்டது. அந்தப் பரமாத்ம தத்வம் அப்படிப்பட்டது என்பது இந்த மந்த்ரத்தால் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] आसीनः - உட்கார்ந்திருப்பவனாகவே, दूरं व्रजति - வெகு தூரம் போகிறான். शयानः - படுத்திருப்பவனாகவே, सर्वतो याति- எவ்விடத்திலும் ஸஞ்சரிக்கிறான். तम् - அப்படிப்பட்ட, मदामदम् - [பரஸ்பர விருத்த தர்மங்களாகிற] ஸந்தோஷத்துடன் கூடியிருப்பது- அது இராமல் இருப்பது - இவை போன்ற தர்மங்களால் தொடப்படாதவனா யிருக்கும், देवम् - பரமாத்மாவை, मदन्यः–என்னைத் தவிர்த்த, कः - எவன், ज्ञातुम् - அறிவதற்கு, अर्हति - யோக்யனாவான் ?

'உட்கார்ந்து கொண்டே ஓடுகிறான், படுத்தே ஸஞ்சரிக்கிறான்' என்று பேசுவதெல்லாம் பரமாத்மாவின் விசித்ர ஶக்தியைக் குறிப்பதற்காக. 'நமக்கு எவை எவை விருத்த தர்மங்களென்று தென்படுகின்றனவோ, அவையெல்லாம் அவனிடத்தில் ஸம்பவிக்கும். அவ்வளவு ஶக்தி வைசித்ர்யம் அவனிடம் இருக்கின்றது. ஆகையால் அவனை நம்முடைய ப்ரயத்நத்தால் மாத்ரம் அறியமுடியாது' என்பது இந்த மந்த்ரத்தின் தாத்பர்யம்.

मदामदम् - இது 'मद' 'अमद' ஆக இரண்டு பதங்களின் சேர்க்கையால் உண்டானது. இவைகளுக்கு 'ஸந்தோஷத்துடன் கூடிய' 'அது அற்றிருக்கிற' என்பது பொருள். இம்மாதிரியான விருத்த தர்மங்களின் நடுவில் இருப்பவன் என்பது தாத்பர்யம்.

मदन्यः - பரமாத்மாவின் ப்ரஸாதத்தைப் பெற்றிருக்கும் என்னைக் காட்டிலும் வேறானவன். பரமாத்மாவின் ப்ரஸாதத்தைப் பெற்றவர்களுக்கே அவன் ஸுலபமாக அறியப்படக்கூடியவன் என்பது கருத்து.

---

22. பரமாத்மாவின் விசித்ர வைபவமே வேறு முகமாக மறுபடியும் பேசப்படுகின்றது.

[ப - ரை.] अशरीरम् - [கர்மத்தால் ஏற்படும்] ஶரீரமற்றவனாயும், अनवस्थेषु शरीरेषु - அஸ்திரங்களான ஶரீரங்களுக்குள், अवस्थितम् - [நித்யமான அந்தராத்மாவாக] இருக்கிறவனாயும், महान्तं विभुम् -[இப்படிப்பட்ட] மஹா வைபவஶாலியாயுமிருக்கும், आत्मानम् - பரமாத்மாவை, मत्वा - த்யாநம் செய்துகொண்டு, धीरः - நல்ல புத்தியை உடையவன், न शोचति - துக்கங்களுக்குப் பாத்ரமாகிறானில்லை.

ஶரீரம் இராமல் இருக்கையிலும் ஶரீரங்களில் நித்யனாக இருப்பது மஹா வைபவமன்றோ?

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम् ॥ २३ ॥

---

23. 'அந்தப் பரமாத்மா இவ்வளவு துரதிகமனாக இருந்தால் அவனை அடைவது எப்படி? **'मत्वा'** [த்யானம் செய்து] என்று கீழ் மந்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ள உபாயம் எப்படிப்பட்டது?' என்று கேள்வி பிறக்க, அதற்கு ஸமாதானமாக அவனை அடையும் உபாயம் யாது என்பதை இந்த மந்த்ரம் விளக்குகின்றது.

[ப - ரை.] **अयमात्मा** - இந்தப் பரமாத்மா, **प्रवचनेन** - [கேவலம்] மனனத்தால், **न लभ्यः** - அடையக்கூடாதவன்; **मेधया**-[கேவலம்] நிதித்யாஸனத்தாலும், **न** - [அடையக்கூடியவன்] இல்லை; **बहुना श्रुतेन** - [கேவலம்] அளவற்ற ஶ்ரவணத்தாலும், **न** - [அடையக்கூடியவன்] இல்லை. **एषः** - இந்தப் பரமாத்மா, **यम्**-எவனை, **वृणुते** வரிக்கிறானோ, **तेनैव**-அவனாலேயே **लभ्यः**-அடையத்தகுந்தவன். **तस्य**-அவனுக்கு, **एष आत्मा**-இந்தப் பரமாத்மா, **स्वां तनुम्** - தன்னுடைய ஸ்வரூபத்தை, **विवृणुते** - ப்ரகாஶிப்பிக்கிறான்.

இதன் கருத்து என்னவென்றால்: 'பக்தியற்ற ஶ்ரவண மனன நிதித்யாஸனங்களால் பரமாத்மா அடையத்தகுந்தவன் அன்று. அவனிடத்தில் எந்த உபாஸகன் அளவற்ற ப்ரீதி செய்கிறானோ, அந்த உபாஸகன் அவனுக்கு அளவற்ற ப்ரீதி விஷயமாகிறான். அப்படி ப்ரீதி விஷயமாயிருப்பவனையே அவன் வரிப்பானாதலால், அந்த உபாஸகனுக்கே அவ்ன் தனது ஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பிக்கிறான்' என்பதுதான். ஆகையால் 'எவனை வரிக்கிறானோ அவனுக்கே தனது ஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பிக்கிறான்' என்பதற்கு 'அவன் ஒருவித வ்யாஜத்தையும் அவலம்பியாமல் தனது இஷ்டப்படி குணதோஷ விவேசனமின்றிக்கே தன் ஸ்வரூபத்தைக் கொடுத்துவிடுகிறான்' என்பது கருத்தன்று.

"**प्रियतम एव हि वरणीयो भवति। यस्यायं निरतिशयप्रियः स एवास्य प्रियतमो भवति। यथाऽयं प्रियतमः आत्मानं प्राप्नोति तथा स्वयमेव भगवान् प्रयतते ॥**"

[எவன் ப்ரியதமனோ அவனே வரிக்கத்தகுந்தவனாவான். எந்த உபாஸகனுக்கு இந்தப் பரமாத்மா அத்யர்த்த ப்ரியனோ, அவனே அவனுக்கு ப்ரியதமனாவான். அப்படிப்பட்ட ப்ரியதமன் எப்படி தன்னை அடைவானோ, அப்படி அந்தப் பரமாத்மா ஸ்வயமாகவே ப்ரயத்னப்படுகிறான்] என்பது ஸ்ரீ பாஷ்ய ஸூக்தி. பகவானாலே வரிக்கப்படும் தன்மை பகவானிடத்தில் அளவற்ற ப்ரீதிசெய்பவனுக்கே ஸம்பவிக்கும் என்பது தாத்பர்யம். பகவானிடத்தில் ப்ரீதி செய்கிறவனே பகவத் ப்ரீதி விஷயமாகிறான் என்பதை ஸ்ரீ கீதாசார்யனும் அநுக்ரஹித்திருக்கிறான்.

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥ २४ ॥

"तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥"

'वृणुते' - வரிக்கிறான். 'வரணம்' என்னும் ஶப்தத்திற்கு 'என்னை இவன் அடையக்கடவன் என்னும் ஸங்கல்பம்' என்பது பொருள். **"मामयं प्राप्नुयादित्यमोघः सङ्कल्पः"** என்று தத்வ டீகையில் விவரணம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மந்த்ரத்தில் 'ப்ரவசநம்' 'மேதை' 'ஶ்ருதம்' என்று மூன்று விஷயங்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றும் முறையே 'மநநம்' 'நிதித்யாஸநம்' 'ஶ்ரவணம்' என்று மற்றோரிடத்தில் சொல்லப்படும் மூன்று ப்ரக்ரியைகளைச் சொல்லுகின்றனவென்று வ்யாக்யாநிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளுள் 'ஶ்ருதம்' என்னும் பதம் 'ஶ்ரவணம்' என்பதைக் குறிக்கின்றது என்பது வ்யக்தம். 'ப்ரவசநம்' என்பது 'மநந'த்தைக் குறிக்கின்றது என்பதும் **'प्रोच्यतेऽनेन'** என்று கரண வ்யுத்பத்தியினால் ஸித்திக்கும். இப்படி இவ்விரண்டு பதங்களும் ஶ்ரவணத்தையும் மநநத்தையும் குறித்துவிட்டால், நிதித்யாஸநம் ஒன்றே அவஶிஷ்டமாக இருக்கிறபடியால், 'மேதை' என்பது நிதித்யாஸநத்தைக் குறிக்கின்றது என்று சொல்லலாம் என்பது வ்யாக்யாந கர்த்தாக்களின் கருத்து. இதற்குமேல் மற்றும் ஒரு ஸம்ஶயம் வரக்கூடும். **"निदिध्यासितव्यः"** [த்யாநம் செய்யவேண்டும்] என்று ஶ்ருதியில் ஆத்ம நிதித்யாஸநத்தை ஜ்ஞாநத்திற்கு உபாயமாகச் சொல்லியிருக்கிறபடியால், **'मेधया आत्मा न लभ्यः'** [நிதித்யாஸநத்தால் ஆத்ம ப்ராப்தி வரமாட்டாது] என்று சொல்வது ஸங்கதமாகுமோ? என்பதுதான் அந்த ஸம்ஶயம். இதற்குப் பின்வருமாறு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் 'ஶ்ரவண மநந நிதித்யாஸநங்கள் ஆத்ம ப்ராப்திக்கு ஸாதநங்களல்ல' என்பது சொல்லப்படவில்லை. இவைகள் எவ்வளவு இருந்தாலும் அவை ப்ரீதியற்றவைகளாக இருக்கும் பக்ஷத்தில் அவைகள் ப்ரயோஜநப்படமாட்டா என்றே சொல்லப்படுகிறது. இந்தத் தாத்பர்யத்தை வ்யாக்யாநிக்கிறவர்கள், 'கேவல ப்ரவசநத்தாலாவது கேவல நிதித்யாஸநத்தாலாவது கேவல ஶ்ரவணத்தாலாவது ஆத்மாவை அடைய முடியாது' என்னும் விவரணத்தால் விளக்கியிருக்கிறார்கள்.

---

24. இப்படி ப்ரீதியுடன் செய்யப்படும் உபாஸநமே பரமாத்ம ப்ராப்திக்குக் காரணமாகும் என்பதைச் சொல்லிவிட்டு, இனி 'அந்த உபாஸநம் நிறைவேற[illegible]ல் சில தர்மங்களை அந்த உபாஸநத்திற்கு அங்கமாக அநுஷ்டிக்க[illegible]வேண்டுமென்று சொல்லப்படுகின்றது.

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—6—'43 to 30—6—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

No.	Name		Rs.
1.	Sri I. Srinivasachariar, Teachers' College, Saidapet	...	1 0
2.	,, T. S. Ramannah Iyengar. Bangalore	...	3 0
3.	,, S. Rangaswami Iyengar, Worriyur	...	3 0
4.	,, L. C. Sundaravaradachariar, Chittoor	...	3 0
5.	,, A. Ramanuja Bhashyam Iyengar, Kallavazhiendal	...	3 0
6.	,, K. R. Narasimha Raghavan, Salem	...	3 0
7.	,, A. N. Raghavachariar, Bangalore	...	3 0
8.	,, S. Rajagopalachari, Brahmadesam	...	3 0
9.	,, Thodiyam Komalavalli Krishnamachari, Srirangam	...	3 0
10.	,, K. Aiya Aiyangar, Tirubanathurai	...	3 0
11.	,, T. S. Narayana Iyengar, Elavanur, Trichy	...	3 0
12.	,, K. D. Rajagopala Iyengar, Udaiyur	...	3 0
13.	,, Chinna Tirumalai Iyengar, Puliankurichi Village	...	3 0
14.	,, K. Srinivasan, Tirumanam Village	...	3 0
15.	,, Iyen Vanamamalai Iyengar, Rajapalayam	...	3 0
16.	,, M. S. Vijayaraghavachariar, Sohathur Village	...	3 0
17.	,, M. Duraiswamy Iyengar. Olakkur	...	3 0
18.	,, L. Srinivasachariar, B.A., B.L., Vakil, Arani	...	3 0
19.	,, T. S. Seshadri Iyengar, Thillaisthanam	...	3 0
20.	,, Saranatha Iyengar, Pleader, Vridhachalam	...	3 0
21.	,, T. S. Ramaswamy Iyengar, Kaveripakkam	...	3 0
22.	,, C. A. Venkatachari, Nungambakkam	...	3 0

[இந்த ஸஞ்சிகையுடன் பத்தொன்பது ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன. 1942-வது வருஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது]

ப்ரமுகர்களான பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் உதவியால் பிரஸ் ஆரம்பித்துளோம்!

★ க்ரந்தம், தேவநாகரம் ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் அச்சு வேலைகளும், எவ்வித ரூலிங், பைண்டிங் வேலைகளும், ★

குறித்த காலத்தில் விரைவாகவும் நன்றாகவும் செய்து கொடுப்போம்.

ஆற்காடு பிரஸ், 27, புது அக்ரஹாரம், விழுப்புரம் (S.I.R.)

☞ எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆதரவையுங் கோருகிறோம்.

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க்கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்கு தயாராயிருக்கின்றன

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—4—0	0—6—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யானம் ... (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—4—0	0—6—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0

வேறு இடங்களிலச்சிடப் பெற்றவை

1. மீமாம்ஸாபாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாநதோஷ நிர்ணயம், விதவா விவாஹ கண்டனம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் சிலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

23—4—'43.] நெ. 5, ராமஸ்வாமி தெருவு, தி. நகர், சென்னை.

N.B. மேல்படி விலைகள் இன்று முதல் 2 மாதத்திற்கு மட்டுமே குறைவாக ஏற்பட்டிருக்கிறது.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramasami Street, Tyagarayanagar, Madras.